# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் ☐ இதழ் 22 ☐ மார்ச் 05 - ஏப்ரல் 05 ☐ ISSN 1474 - 8770






ஜேர்மனியில் ஈழத்து தொழிற்சங்கப் போராளி



சேது சமுத்திரத் திட்டம்
இராணுவ விரிவாக்கம்



## இளம் இலக்கியவாதியின் திடீர் மரணம்



'உயிர்நிழல்' ஆசிரியர் கலைச்செல்வன் மார்ச் 5 பரிஸில் மாரடைப்பினால் காலமானார்.

இலங்கையிலிருந்த காலத்தில் முதலில் 'இளம்மருதம்' என்ற கையெழுத்து சஞ்சிகையினூடாக தனது கன்னி கலை, இலக்கிய பணியினை ஆரம்பித்த இவர் கடந்த 20 வருட காலம் பரிஸில் வாழ்ந்து வந்தார். புகலிட வாழ்வினை கலை, இலக்கிய, திரைப்பட முயற்சிகளுக்காகவும் ஜனநாயக மறுப்புகளுக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் மாற்றுக் கருத்துக்களை உருவாக்குவதற்காகவும் அர்ப்பணித்தார்.

ஐரோப்பிய தமிழ் சூழலில் இலக்கியச் சந்திப்பினூடாகவும், பள்ளம், எக்ஸில் போன்ற சஞ்சிகைகள் வாயிலாகவும் பின்னர் உயிர் நிழல் ஆசிரியராகவும் எக்ஸில் நூல் வெளியீட்டாளராகவும் எல்லோராலும் அறியப்பட்டவராக இருந்தார். இவர் பெண்ணியம், தலித்தியம், மனித உரிமை போன்ற கருத்தியல்களில் அசையா நம்பிக்கையுடன் தீவிர விவாதங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைச்செல்வன் யாழ் வறுத்தலைவிளானைச் சேர்ந்தவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்.

## பாலியல் இம்சை

ரொறன்ரோவில் ராமலிங்கம் அபயகரன் (47) தன்னிடம் பணிபுரிந்த 14 வயது இளம் பெண்களை பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கியதற்காக பெப் 10ல் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளார். புலன்விசாரணை அதிகாரி பிராங் டிலியோ விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார். அபயகரன் இன்னும் பலரைத் துன்புறுத்தியிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

## 500க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் விபரங்கள் புலனாய்வுப்பிரிவின் கணனியில்

வன்செயல்கள் மற்றும் மோசடிகளில் தொடர்புடைய 500க்கும் அதிகமான தமிழ் இளைஞர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு ஒப்பிரேசன் என்வர் புலனாய்வுப் பிரிவினரால் கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

நபர்கள் பற்றிய முழுமையான விபரங்களுடன் குழுப்பெயர்கள், தொடர்பில் உள்ளவர்கள், பயன்படுத்தும் வாகன(ம்)ங்கள், தங்குமிடங்கள் என பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டு கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

இலண்டனில் வன்முறை மற்றும் மோசடிகளில் ஈடுபடும் பெரும்பாலானவர்கள் இதற்குள் அடங்குவதாக இதற்கு பொறுப்பான அதிகாரி தெரிவிக்கிறார். இந்தப்பட்டியலை இன்னும் உறுதியாக்க குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய விபரங்களை தங்களுக்கு வழங்கும் படி அவ்வதிகாரி கேட்டுக்கொண்டார்.

தகவலை இரகசியமாக தமிழில் வழங்க விரும்புபவர்கள் தமிழ் ஹொட் லைன் (0800 587 2935) நம்பரைப் பயன்படுத்த முடியும்.

இப்புலனாய்வுத் தகவல்கள் மூலம் குற்றவாளியை இலகுவாக இனம் காணவும் குற்றத்தை நிரூபிக்க இலகுவாக இருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச அபிவிருத்தி

சர்வதேச அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் நியூஹாமில் மார்ச் 7ல் இடம்பெற்றது. அரசின் சர்வதேச அபிவிருத்திச் செயலர் பா.உ ஹில்ரி பென் கலந்துகொண்டார். அந்தந்த நாட்டு மக்களை ஊக்குவித்து; அவர்கள் மூலமே அவரசுகளை செயற்திறனுடையதாக்க வேண்டும் என தேசம் சஞ்சிகையின் கேள்விக்கு அவர் பதிலளித்தார். வளரும் நாடுகளுக்கான உதவிகள் திட்டமிட்டு ஒழுங்காக கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சுனாமியில் புள்ளட் விஜய்

இளம் பெண்ணொருவரின் கொலை தொடர்பாக கனடாவில் தேடப்பட்ட 'புள்ளட் விஜய்' என்ற விஜயராஜ் மாணிக்கவாசகர் (23) இலங்கையை சுனாமி தாக்கியபோது இறந்துவிட்டதாக உறவினர்கள் கனடிய பொலிசாருக்கு தெரிவித்தனர். இது தொடர்பாக ஆராயும் இலங்கை, கனடியப் பொலிஸார் அத்தகவல் பொய்யென சந்தேகம் கொண்டுள்ளனர். அக்கொலைக் குற்றத்தில் இருந்து தப்பிக்கும் முயற்சி இதுவென அவர்கள் நம்புகின்றனர்.

## 68 தமிழ் இளைஞர்கள் கைது! £22 மில்லியன் மோசடி!!

கடந்த ஒன்பது மாதங்களில் 68 தமிழர்கள் குறிப்பாக இளைஞர்கள் வன்முறை மற்றும் மோசடிகளில் ஈடுபட்ட குற்றங்களுக்காக ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் தமிழர்களால் பயன்படுத்தப்பட்ட 14 முகவரிகள் சோதனையிடப்பட்டுள்ளது. அவற்றில் இருந்து இரு துப்பாக்கிகள் உட்பட கூரிய ஆயுதங்கள், கிறடிட்காட்கள், இலத்திரனியல் கருவிகள் எனப்பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மூன்று BMW கார்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை மோசடிகளிலும் குற்றச்செயல்களிலும் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் சமூகத்தில் காணப்படும் வன்முறைக்கும் கிறடிட் காட் மற்றும் பண மோசடிகளுக்கும் தொடர்பு இருப்பதால் இம்மோசடிகளைக் கையாள்வதில் பொலிசார் தமது கவனத்தை திசை திருப்பி உள்ளனர். தனி ஒரு கணக்கில் இருந்து மட்டும் 22 மில்லியன் பவுண் பெறுமதியான மோசடி இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மோசடிகளில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட பல தமிழ் கடைகள், ரெஸ்ரோறன்ற் போன்ற வர்த்தக நிலையங்களில் இருந்தும் கிறடிட்காட் மெசின் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. இந்நடவடிக்கை மேலும் தீவிரமாக்கப்பட உள்ளது.

உள்ளே :

பிணம் செய்யும் தேசம் 01
ஈடாடுகிறார் ஈழத்துச் சிவன் 02
ஈலிங் அம்மன் ஆலயத் தேர்தல் சலசலப்பு 03
தமிழ் பொது அமைப்புகளின் புலிச்சாயம் வெளுக்கிறது 04
குருக்களுக்கு 12 ஆண்டுகள் சிறை 08
சேது சமுத்திரத் திட்டம் 09
பெண்களும் சமூகக் கட்டமைப்பும் 12
கவிதை : பெண்ணுள் 13
ஜேர்மனியில் தொழிற் சங்கத்துக்கான போராட்டம் 14
கவிதை : சிறப்பு முகாம் 16
Books Abroad 16
ஈழத்தின் வடபுலப் பெயர்வும் அது தொடர்பான இலக்கியங்களும் 17
உள்ளத்தை சிதறடித்த பேரலை 19
யார் புரட்சிவாதிகள்? யார் திரிபுவாதிகள் 23
ரசியப் புரட்சியின் வரலாற்று நாயகன் தோழர் ஸ்டாலின் 24
திரை விமர்சனம் 27
பைத்தியங்களைக் கட்டுதல் இயலா 28
சிறுவர் தேசம் 29

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# பிணம் செய்யும் தேசம்

கிழக்கிலங்கைக் கவிஞன் இளைய அப்துல்லா தனது கவிதைத் தொகுப்புக்கு இட்ட பெயர் பிணம் செய்யும் தேசம். இப்படி அமைந்திருக்கக் கூடாது எனச் சிலர் தெரிவித்தனர். ஆனால் இதைத் தவிர வேறு பெயர் வைத்திருக்க முடியாது. கிழக்கிலங்கை மட்டக்களப்பின் நிலைமை தொடர்ந்தும் மோசமாகிக் கொண்டே உள்ளது. தினம் ஒரு கொலை இடம்பெறுகிறது. யாரும் யாரையும் கொலை செய்ய முடியும். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள், என்றெல்லாம் பேதமில்லை. கொலை செய்வதற்கு பெரிதாக ஒரு காரணத்தைத் தேடி அலைய வேண்டியதில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் நியாயமானதாகவும் மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மோசமான சகோதரப் படுகொலைகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்துடனேயே உட்கட்சிப் படுகொலைகளும் ஆரம்பித்து விட்டது. ஸ்ரீலங்காவின் இனவாத அடக்குமுறை இராணுவத்துக்கு எதிராக மூர்க்கமாகப் போராடியவர்கள் அதிலும் மூர்க்கமாக தங்களுக்கு உள்ளேயும் மோதினர்.

LTTE, TELO, PLOT, EPRLF, EROS ஆகிய பெரிதும் பல சிறிதுமாக 30 வரையான அமைப்புகள் தமிழீழ விடுதலைக்காகப் போராடின. இவை தமக்குள் உட்கட்சிப் படுகொலைகளையும் தமக்கிடையே சகோதரப் படுகொலைகளையும் செய்தன. இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களாவது இருக்கும் என அஞ்சப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பெரிய அமைப்புகள் உட்பட பெரும்பாலான சிறு அமைப்புகளும் உட்கட்சிப் படுகொலைகளிலும் சகோதரப் படுகொலைகளிலும் தம்மை கறைப்படுத்திக் கொண்டவர்களே.

பெரும்பாலான விடுதலை அமைப்புகளின் தலைவர்கள் உட்கட்சி மற்றும் சகோதரப் படுகொலைகளிலேயே கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்ட பலர் வாழ்ந்ததற்கான அடையாளமே மறைக்கப்பட்டு அவர்களுடனேயே அதுவும் புதைக்கப்பட்டது அல்லது எரிக்கப்பட்டது. இவையெல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கோரமான மறுபக்கங்கள். ஆனால் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று தசாப்தங்களாகியும் போராட்டத்தை தலைமை தாங்கியவர்கள் இச்செயல்களுக்காக வருந்தவும் இல்லை. படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளவும் இல்லை.

கடந்த 3 மூன்று தசாப்த காலம் தமிழீழ விடுதலை போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர்கள் ஆயுதங்களில் நம்பிக்கை வைத்த அளவுக்கு மக்களிடம் நம்பிக்கை வைக்கவில்லை. பிரதிநிதித்துவப்படுத்தவும் இல்லை. அதனால் போராட்ட உணர்வும் கூர்மையடையவில்லை. உட்கட்சிப்படுகொலைகளும் சகோதரப்படுகொலைகளும் பழிவாங்கலும் போராட்டத்தின் பாதையில் இருந்து பலரைத் திசை திருப்பியது. வசதியான ஒரு பிரிவினர் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரினர். அதற்கு வசதி குன்றியவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றனர். அந்த வசதியுமற்றவர்கள் எந்த இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தினார்களோ விரும்பியோ விரும்பாமலோ அவர்களிடமே அடைக்கலம் தேடினர் அல்லது தேட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இன்று மட்டு, அம்பாறை மக்கள் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளிலும் பார்க்க இனம் தெரியாத தமிழ் இளைஞர்களுக்கே அதிகம் அஞ்சுகின்றனர். இராணுவம் கொலைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்படும் போதும் அட்டகாசம் புரியும் போதும் அதனை ஜனநாயக வழிகளில் எதிர்க்க அன்றும் இன்றும் தமிழ் மக்கள் தயங்கியதில்லை. அதுபோல் எப்போது தமிழ் மக்கள் சகல படுகொலைகளுக்கும் எதிராக போராடத் தயாராகுகிறார்களோ அப்பொழுதே இப்படுகொலைகளை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். அதுக்கான ஒரு ஆரம்பமே வெலிகந்தை மக்களின் போராட்டம். தமிழ் மக்களின் பெயரால் யாரும் கொல்லப்பட வேண்டிய தேவையும் அவசியமும் இல்லை. படுகொலைகள் யாவும் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

பிந்திய செய்தி

ஜெயதேவன் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டு விடு விக்கப்பட்டதும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் எதிர்காலமும் இலண்டன் தமிழர்களை பரபரப்புக்கு உள்ளாக்கியுள்ளது. பிரித்தானிய உளவுப் பிரிவினர் ஜெயதேவன் விடயம் தொடர்பாக தன்னை மறைமுகமாக எச்சரித்ததாக சண்டே லீடர் என்ற கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்ட கட்டுரையை வி.புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மறுத்துள்ளார். "As the chief negotiator involved in Sri Lanka's peace process, I have contacts with British government authorities, but at no stage has Jeyadevan's affair been raised with me by British officials," என அவர் வி.புலிகளுக்கு ஆதரவான தமிழ்நெற் இணையத் தளத்துக்கு மார்ச் 22ல் வழங்கிய பேட்டியில் தன் மறுப்பைத் தெரிவித்துள்ளார்.



# ஜெயதேவனின் விடுவிப்பும் சீவரத்திணத்தின் தவிப்பும்

# ஈடாகேஸ்ரார் ஈழத்துச் சிவன்

ஜெயதேவன் விடயமாக வி.புலிகள் வெளியிட்ட ஒரே ஒரு உத்தியோகபூர்வமான அறிவிப்பு இதுவாகும். இதில் ஜெயதேவன் தடுத்து வைக்கப்பட்டதையும் சன்டே லீடரில் டிபிஎஸ் ஜெயராஜ் குறிப்பிட்டபடி மார்ச் 9ல் பிரித்தானிய உளவுத்துறையினர் சந்தித்தனர் என்பதையும் பாலசிங்கம் மறுக்கவில்லை.

எதிர்பார்க்கப்பட்டது போலவே ஈழபதீஸ்வரர் ஆலயத் தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மார்ச் 22ல் ஆலயத்தின் பூட்டு கட்டிடச் சொந்தக்காரர்களான உள்ளூர் தொழிற்கட்சியினரால் மாற்றப்பட்டது. மறுநாள் காலை சிவயோகம் அணி பூட்டை உடைத்து ஆலயத்துக்குள் நுழைந்தனர். இவர்கள் பின்னர் பொலிசாரினால் வெளியேற் றப்பட்டனர். அதையடுத்து ஆலயத்தை திறப்பதற்கான கையெழுத்து வேட்டை சிவயோகம் அணியினரால் மேற் கொள்ளப்பட்டது. (அப்போது ஆலயத்தில் வைத்து எடுக் கப்பட்ட படங்கள்) ஈஸ்ரர் நீண்ட விடுமுறைக்கு முதல்நாள் சிவயோகம் அணியினர் மக்களின் வழிபாடுகள் தடைப்படு கிறது என்ற அடிப்படையில் ஆலயத்தை திறக்கக் கோரி நீதிமன்றம் சென்றனர்.



வழிபடுவதற்கான சுதந்திரம் (Freedom of Worship) என்ற அடிப்படையில் தற்காலிக அனுமதியை வழங்கிய நீதிமன்றம் மார்ச் 31ல் வழக்கை விசாரணைக்கு எடுக்க உள்ளது. இவ்விசாரணையில் ஜெயதேவன் தடுத்து வைக் கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பலவந்தமாக கையெழுத்து பெறப்பட்டது போன்ற விடயங்கள் வெளி வரும் என ஜெயதேவன், விவேகானந்தனுக்கு நெருக்கமா னவர்கள் தேசத்துக்கு தெரிவிக்கின்றனர். இவ்வழக்கு விசாரணை பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றவியல் விசாரணையாக அமையலாம் என அவர்கள் தெரிவிக்கின் றனர். அவ்வாறு அமைந்தால் சீவரத்தினம் அணியினரின் வெற்றி வாய்ப்புகள் மிக கடினமாகவே இருக்கும்.

மேலும் ஏற்கனவே ஆலயத்தில் பூஜை மற்றும் பணிக ளில் ஈடுபட்ட குருக்கள் மற்றும் பணியாளர்கள் சீவரத்தி ணத்துடன் ஒத்துழைக்க மறுத்ததை அடுத்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான வழக்கும் விரைவில் விசாரணைக்கு வரலாம் எனத் தெரியவருகிறது.

இதுவிடயமாக நாம் ஜெயதேவன், விவேகானந்தன் ஆகியோரை மார்ச் 24ல் தொடர்பு கொண்டோம். தன் மீது வைக்கப்பட்ட சகல குற்றச்சாட்டுகளும் பொய்யானது என்றும் ஆதாரமற்றது என்றும் தெரிவித்தார் ஜெயதேவன். அவர் மேலும் குறிப்பிடுகையில் குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்தியவர்கள் பொது அரங்கில் நேருக்கு நேராக வந் தால் அவர்களது குற்றச்சாட்டுகள் பொய்யானது என்பதை யும் ஆதாரமற்றது என்பதையும் தான் நிருபிப்பேன் என சவால்விட்டார்.

பேட்டியின் போது ஜெயதேவனும் விவேகானந்தனும் தமது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாகவும் தெளிவாக வும் இருந்தனர். பேட்டியின் பெரும்பாலான அம்சங்களை

சட்ட மற்றும் காரணங்களுக்காக முழுமையாகப் பிரசுரிக்கும் அனுமதியை அவர்கள் மறுத்துவிட்டனர்.

ஜெயதேவனின் சவாலை நீங்கள் ஏற்றுக் கொளளத் தயாரா என ஆலயத்தின் ஆரம்பகாலத் தலைவர் மு சிவராஜாவிடம் கேட்ட போது விவாதத்துக்கு வரும் தகுதி ஜெயதேவனுக்கு இல்லை என்றும் மனிதத்தன்மை உடையவர்களுடன் தான் விவாதிக்கலாம் என்றும் மிகவும் ஆவேசமாக உணர்ச்சி கொப்பளிக்கத் தெரிவித்தார். ஜெயதேவன் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் நீங்கள் குற்றச்சாட்டுகைள அனுப்பியதாக செய்திகள் வெளியாகி உள்ளதே எனக் கேட்டதற்கு எத்தனையோ பேர் எவ்வளவோ காலமாக தங்கள் மனப் புளுக்கத்தை எழுதி அனுப்பி உள்ளார்கள் என சிவராஜா பதிலளித்தார்.

TCHAல் இயக்குநர் பதவியில் இருந்து வெளியேற்றப் பட்ட விடயத்தில் ஜெயதேவனது நிலைப்பாட்டைக் கேட்ட போது அது தொடர்பான வழக்கு இவ்வாண்டு நடுப் பகுதியில் தொழில் நீதிமன்றத்துக்கு வரும் என அவர் தெரிவித்தார். நியாயமற்ற முறையில் வேலைநீக்கம் செய்தது, TCHAல் வைத்து தாக்கியது ஆகிய குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் TCHAக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக ஜெயதேவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக TCHA தலைவர் ராம்ராஜ் உடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. வன்னிக்கு குற்றச்சாட்டுகளை அனுப்பியவர்கள் வரிசையில் இவரது பெயரும் முக்கியமாக இடம்பெற்று உள்ளது. ஜெயதேவன் அணியில் நின்ற இவர் தற்போது சிவராஜா அணியுடன் கூட்டணி அமைத்துள்ளார்.

குற்றச்சாட்டுகளை வன்னிக்கு அனுப்பியதாக கூறப் பட்ட இன்னுமொருவர் தமிழர் அகதிகள் நடவடிக்கைக் குழு TRAG அலுவலரும் TCHA அங்கத்தவருமான நவநாயகம். ஜெயதேவனுக்கு எதிரன பல குற்றச்சாட்டுகள் தன்னிடம் இருப்பதாகக் குறிப்பிட்ட நவநாயகம் எந்தக் குற்றச்சாட்டையும் தான் அண்மையில் வன்னிக்கு அனுப்ப வில்லை என்றும் ஊடகங்கள் நினைத்தபடி செய்தி வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே லண்டன் தமிழ் நிலையத்தின் தலைமை பொறுப்பை சீவரட்ணம் ஏற்றதை அடுத்து அதுவும் வி.புலி களால் சுவீகரிக்கப்பட்டதாக செய்தி பரவியுள்ளது. ஈழ பதீஸ்வரர் ஆலயத்தை சீவரட்ணம் பொறுப்பேற்றதும் தமிழ் நிலையத்தின் தலைமைப் பொறுப்பை சீவரட்ணம் பொறுப் பேற்றதும் வெவ்வேறான விடயங்கள் என்று அந்நிலையத் தின் அதிபர் டொக்டர் நித்தியானந்தன் மார்ச் 27ல் தேசத்துக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். சீவரட்ணம் லண்டன் தமிழ் நிலையத்தின் யாப்பை மாற்ற முயற்சித்தது பற்றிக் கேட்ட போது அதனை மாற்றுவது கடினமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். மற்று மொரு கேள்விக்கு பதிலளிக்கும் போது சீவரட்ணத்திடம் மடல் வாங்கிக் கொண்டு, வன்னித் தலைமையைச் சந்தித்ததாகக் கூறப்படுவது பொய்யான செய்தி என்று தெரிவித்த நித்தியானந்தன் தனக்கு வன்னித் தலைமை யுடன் நேரடியாகவே தொடர்பு உள்ளது என்று தெரிவித் தார். தனது ஓய்வுகாலத்தை தான் இலங்கையிலேயே கழிக்க முற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.❑

(இது பற்றிய முழுமையான கட்டுரை மறுபக்கத்தில்)

## அதிக வருமானம் கொண்ட ஈலிங் அம்மன் ஆலயத் தேர்தல் சலசலப்பு

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய செயற்குழுவுக்கு மார்ச் 27ல் இடம்பெற இருந்த தேர்தல் ஏப்ரல் 10க்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. இத்தேர்தலில் ஆலயத்தின் தற்போதைய செயற்குழுத் தலைவர் கருணலிங்கத்துக்கு எதிராக யோகநாதன் என்பவரை எதிரணியினர் நிறுத்தி உள்ளனர். 6 இடங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது. வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் பிரச்சினை கிளப்பிய எதிரணி வேட்பாளர்கள், நீதிமன்றம் சென்று தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.

ஆலயத்தின் ஆண்டுச் சந்தா 36 பவுண்களை செலுத் திய உறுப்பினர்களே வாக்களிக்க முடியும் என எதிரணி தெரிவிக்கின்றது. அவ்வாறு சந்தா செலுத்தியவர்கள் 125 பேர்வரையே இருப்பார்கள். ஆனால் பல்வேறு காரண ங்களாலும் முழுமையான சந்தாவை செலுத்தாமல் ஒரு சிறுபகுதி சந்தாவைச் செலுத்தி உள்ளவர்களின் எண்ணி க்கை 600க்கும் அதிகமாக உள்ளது.

அங்கத்தவர்கள் சுனாமிக்கு வாரி வழங்கி இருந்ததால் அவர்களிடம் மீண்டும் பணத்தைக் கேட்டு அழுத்தம் கொடுப்பது அழகல்ல என்றும் அதனால் சந்தாவில் ஒரு பகுதியைச் செலுத்தியவர்களையும் வாக்களிக்க அனும திப்பது என செயற்குழு முடிவு செய்தது.

எதிரணியில் போட்டியிடும் யோகநாதன், ராமச்சந்திரன் ஆகியோர் செயற்குழுவின் அந்த முடிவை எதிர்த்து தேர்தலுக்கு தடை உத்தரவை வாங்கியுள்ளனர். பகுதி சந்தாவை செலுத்தியவர்கள் வாக்களிக்க முடியுமா இல்லையா என்பதை நீதிமன்றம் விரைவில் தீர்மானிக்கும்.

சந்தாவில் பகுதியை செலுத்தியவர்கள் பெரும்பாலும் கருணலிங்கத்துக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என எதிரணியினர் அஞ்சுவதால் அவர்களை வாக்களிப்பதில் இருந்து நீக்கிவிட எதிரணி முயற்சிக்கின்றது.

ஒரு அமைப்பு தனது ஜனநாயகத்தை முறையாகப் பேண அவ்வமைப்பில் இணைந்து உள்ளவர்களின் முழு மையான பங்களிப்புப் பெறப்பட வேண்டும். அவ்வமைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களை அவ்வமைப்பின் ஜனநாயக செயற்பாட்டில் இருந்து நீக்க ஜனநாயகத்தை அறிமுகப்படுத்திய இந்நாட்டில் இருந்தே முயற்சிப்பது எதிரணியினை மேலும் பலவீனப்படுத்தவே செய்யும்.

நியாயங்களை முன்வைத்து வாக்குகளை வெல்லாமல் வாக்குரிமையைப் பறித்து வெல்ல நினைப்பது எப்படி ஜனநாயகமாகும்? என்கிறார் பகுதி சந்தா செலுத்திய அங்கத்தவர் நற்குணம். காசு கட்டவில்லை என்பதற்காக மட்டும் உரிமையைப் பறிக்க முடியாது என்கிறார் அவர்.❑

**பங்காளிச் சச்சரவில் ஈழத்துச் சாமிக்கு வில்லங்கம் :**

# தமிழ் பொது அமைப்புகளின் புலிச் சாயம் வெளுக்கிறது

அமன் தீபன்
த ஜெயபாலன்
ரி கொன்ஸ்ரன்ரைன்

வன்னியில் தடுத்து வைக்கப்பட்ட இலண்டனில் மிகவும் சர்ச்சைக்குரியவராக அறியப்பட்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆர் ஜெயதேவன் விடுவிக்கப்பட்டு மார்ச் 12ல் இலண்டன் வந்தார். இவர் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக ஸ்கொட்லண்ட்யாட்டுக்கு முறையிடப்பட்டிருந்தது.

சுனாமிக்கு மறுநாள் டிசம்பர் 27ல் இலங்கை சென்ற இவர் மார்ச் 10ல். சு.ப தமிழ்செல்வன் குழுவினர் ஐரோப்பாவுக்கு புறப்படுவதற்கு சற்று முன்னதாக விடுவிக்கப்பட்டார். மேலும் ஜெயதேவன் விடுவிக்கப்படுவதற்கு முதல் நாள் பிரித்தானிய உளவுத்துறை இது தொடர்பாக வி.புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எச்சரித்ததாக முன்னணி கட்டுரையாளர் டிபிஎஸ் ஜெயராஜ் எழுதியுள்ளார். மேலும் ஜெயதேவன் விடுவிக்கப்படாத பட்சத்தில் ஐரோப்பாவுக்கு வரும் சு.ப.தமிழ்செல்வன் குழுவினருக்கு எதிராக அந்தந்த நாடுகளில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்யவும் அவர்களை கைது செய்ய அழுத்தங்களை வழங்கவும் இலண்டனில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. மேற்படி அழுத்தங்களால் ஜெயதேவனை விடுதலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

ஜெயதேவன் முன்னாள் தமிழ் சமூக வீடமைப்பு அமைப்பின் இயக்குனர், ஈழபதீஸ்வரர் ஆலயம் மற்றும் கிங்ஸ்பரி பாடசாலையின் பொறுப்பாளர், விடுதலை பத்திரிகையின் ஆசிரியர். உரிமையாளர். தமிழ் கார்டியன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்.

ஜெயதேவன் இலங்கை சென்று ஒருவாரத்தின் பின் ஜனவரி 5ல் அவரது நண்பரும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினருமான விவேகானந்தனும் இலங்கைக்குச் சென்ற போது வன்னியில் வி.புலிகளால் தடுத்து வைக்கப்பட்டனர். இது பற்றி வி.புலிகள் எந்த உத்தியோகபூர்வமான அறிவிப்பையும் விடவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் மார்ச் 5ல் விடுவிக்கப்பட்டார். விவேகானந்தனின் விடுதலைக்கு அவரது மருமக்கள் இருவர் பிணை நின்றதாக ஏசியன்ரிபியூன் மார்ச் 9ல் செய்தி வெளியிட்டு உள்ளது. இலண்டன் திரும்பிய விவேகானந்தனைச் சந்தித்து ஜெயதேவன் பற்றிய விபரத்தை அறிந்து வந்த ஜெயதேவனின் மாமனார் (மனைவியின் தந்தை) பொன்னையா மார்க்கண்டு அதிர்ச்சி காரணமாக மாரடைப்பால் காலமானார். இவரது இறுதிக் கிரியைகள் மார்ச் 7ல் இடம்பெற்றது.

மேலும் ஜெயதேவன் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் கவனத்திற்கும் கொண்டுவரப் பட்டிருந்தது.

## ஜெயதேவனும் வி.புலிகளும் :

முப்பது ஆண்டுகளுக்கு முன் புலம்பெயர்ந்த ஜெயதேவன் வி.புலிகளின் மிகுந்த ஆதரவாளராக அறியப்பட்டவர். யாழ்ப்பாணம் நாவற்குழியில் வாழ்ந்த ஜெயதேவன் குடும்பத்தினர் வி.புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததால் 1990ல் இந்திய இராணுவம் தாயகப் பகுதிகளில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஜெயதேவனின் தாய், தந்தை, சகோதரன் மற்றும் வீட்டில் இருந்த ஒரு வயோதிபர் என நால்வர் கொல்லப்பட்டனர். தனது குடும்பத்தார் கொல்லப்பட்டதை அடுத்து தனது ஆங்கிலப் புலமையைப் பயன்படுத்தி ஜெயதேவன் இந்திய அரசுக்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.



வன்னியில் தடுத்து வைக்கப்பட்ட மிகவும் சர்ச்சைக்குரியவராக அறியப்பட்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆர் ஜெயதேவன்

தொழிற்கட்சி உறுப்பினரான ஜெயதேவன் வடக்கு இலண்டன் தொழிற்கட்சி அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். தனது பாடசாலையின் ஸ்தாபகராக பா.உ பரி காடினரை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பொலீஸ் அலுவலர்களுடனும் நட்புறவைக் கொண்டிருந்தார். ஸ்கொட்லண்ட் யாடின் தமிழ் ஆலோசனைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். 2003 செப்ரம்பரில் தமிழ் சமூகப் பிரதிநிதிகளை அழைத்து ஸ்கொட்லண்ட் யாட் ஏற்பாடு செய்த சந்திப்பில் இலண்டனில் இளைஞர்களின் வன்முறையை அடக்க மெற் பொலிசார் வி.புலிகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என ஜெயதேவன் கேட்டுக் கொண்டார்.

## பொது அமைப்புகளில் வி.புலிகள் :

தொண்ணூறுக்களில் வி.புலிகளின் ஆதரவாளர்கள் இலண்டனில் உள்ள தமிழ் பொது அமைப்புகளை

கைப்பற்றிய போது அவற்றின் முக்கிய பொறுப்புகளை ஜெயதேவன் போன்றவர்கள் பெற்றுக்கொண்டனர். ஜெயதேவனின் ஆங்கிலப் புலமையும் வேகமும் மற்றையவர்களைக் காட்டிலும் அவரை முன் தள்ளியது.

மேலும் வி.புலிகளின் ஆதரவாளர்கள் வெம்பிளியில் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை 1999ல் நிறுவினர். அதன் தலைவராக மு சிவராஜா (ஈழம் ஹவுஸின் உரிமையாளர்) செயலாளராக ஆர் ஜெயதேவன் தனாதிகாரியாக பி சவுந்தரராஜன் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் மிக நெருங்கிய நண்பர்கள். தற்போது தடுத்து வைக்கப் பட்டு விடுவிக்கப்பட்ட கெ விவேகானந்தன் உட்பட மேலும் நால்வர் நிர்வாகத்தில் உறுப்பினர்களாக இருந்தனர்.

ஆனால் வி.புலிகளின் ஆதரவாளர்களர்கள் காலப் போக்கில் வி.புலிகளின் பெயரில் தங்களை வளர்த்துக் கொள்ள முற்பட்டனர். அதனால் இலண்டனில் வி.புலி களின் ஆதரவாளர்களிடையே பிளவு ஏற்பட்டது. போட்டிக ளும் வெட்டி ஓடல்களும் சர்வ சாதாரணமாக நிகழ்ந்தன. ஜெயதேவன், தானே உண்மையான வி.புலி என்று கூறியதுடன் தனது கட்டுப்பாட்டில் இருந்த ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் மாவீரர் தினம் போன்ற நிகழ்ச்சிகளையும் கொண்டாடினார்.

## தமிழ் பொது அமைப்புகள் :

ஈழபதீஸ்வரர் ஆலயம், TCHA, TR-TEC என்பவற்றின் மோசடிகள் நீதிமன்றம் வரை சென்றன. (பார்க்க : தேசம் இதழ் 12, ஏப்ரல் 03 : நீதிமன்றத்தின் தீர்ப்பு, சட்டத்தரணி ரங்கனுடன் நேர்காணல், தேசம் இதழ் 11, ஜனவரி 03 : TCHA, TRC, TR-TEC குழப்பங்கள் தீரவில்லை) தங்களை வி.புலி ஆதரவாளர்கள் என்று கூறி, பொது அமைப்புகளுக்குள் நுழைந்தவர்கள் வி.புலிகள் அமைப்பு இலண்டனில் தடைசெய்யப்பட்டதை சாக்காக வைத்து வெளியே தமிழ் மக்கள் மத்தியில் வி.புலிகளின் ஆதரவா ளர்களாகவும் ஆனால் உண்மையில் வி.புலிகளில் இருந்து ஒதுங்கியும் இருந்தனர். (பார்க்க : தேசம் இதழ் 10, நவம்பர் 2002 : t - Commerce - புலித்தோல் போர்த்தும் பச்சோந்திகள், சீரற்ற - திறனற்ற - ஊழல் நிறைந்த தமிழ் பொது அமைப்புகள்)



ஜெயதேவனது think tankஆகவும் குற்றச்செயல்க ளுக்கு உறுதுணையாகவும் இருந்த ஜெயதேவனின் மிக நெருங்கிய நண்பரும் TCHAஇன் தலைவருமான என் ராம்ராஜ்

இப்போது அமைப்புகளில் ஆர் ஜெயதேவன், TCHA தலைவர் என் ராம்ராஜ், TR-TEC முகாமையாளர் அ சிறிதரன் போன்றவர்களின் அதிகார துஸ்பிரயோகம் மிகவும் மோசமடைந்தது. ஆனால் தொடர்ந்தும் இவர்கள் தங்களை தீவிர வி.புலி ஆதரவாளர்களாகவே காட்டிக் கொண்டனர். அதனால் இவர்களை விமர்சிப்பது வி.புலிக ளுக்கு எதிரானது என்ற மாயை கற்பிக்கப்பட்டது.

## ஜெயதேவனின் சரிவு :

இலண்டனில் வி.புலி ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட பிளவு ஜெயதேவனின் நண்பர் வட்டத்தையும் பாதித்தது. ஜெயதேவனுக்கு எதிரிகள் அதிகரித்தனர். மே 10 2002ல் சிவராஜா, 250க்கும் மேற்பட்டவர்களுக்கு தலைமை தாங்கி ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்ற முயற்சித்தார். அதனை ஜெயதேவன் பொலிசாரின் துணையுடன் சாமர்த்தியமாக முறியடித்தார். வி.புலிகளின் பத்திரிகை என்ற பாணியில் விடுதலை என்ற பத்திரிகை யை கொண்டு வந்து தேசம் சஞ்சிகை, உதயன் பத்திரி கை என்பவற்றின் மீது அரசியல் சாயம் பூசினார் ஜெயதேவனும் அவரது நண்பர் இந்திரகுமாரும். வெளி வந்த விடுதலை பத்திரிகையின் ஆறு இதழ்களிலும் ஜெயதேவனும் இந்திரகுமாரும் தங்களுக்கு பிடிக்காதவர் கள் மீது வசைபாடினார்.

ஆனால் ஜெயதேவன், ராம்ராஜ், அ சிறிதரன், இந்திர குமார் போன்றவர்களை தேசம் சஞ்சிகை அம்பலப்படுத் தியது. நீதி மன்றங்களில் இந்நபர்களுக்கு எதிராக வழக்குகளின் தீர்ப்புகள் அமைந்தன. இவற்றை தேசம் சஞ்சிகையும் உதயன் பத்திரிகையும் மட்டுமே வெளிக் கொண்டு வந்தன. ஐரோப்பியத் தமிழ் தேசிய ஊடகங்கள் ஜெயதேவனின் கட்டளைக்கு பணிந்து போயின. சிவராஜா வழங்கிய விளம்பரத்தையே ஜெயதேவனுக்குக் கட்டுப்பட்டு இடைநிறுத்தியது ஐபிசி தமிழ். ஆனால் ஜெயதேவன் வழங்கிய தவறான செய்தியை அப்படியே ஒலிபரப்பினர்.



இலண்டனில் சர்ச்சைக்குள்ளான மற்றுமொரு அமைப்பான TR-TEC இன் முகாமையாளர் அ சிறிதரன்

ஜெயதேவனது think tankஆகவும் குற்றச்செயல்க ளுக்கு உறுதுணையாகவும் இருந்த ஜெயதேவனின் மிக நெருங்கிய நண்பரும் TCHAஇன் தலைவருமான என் ராம்ராஜ்க்கும் இடையே ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து ஜெயதேவன் கடந்த ஆண்டு ஏப்ரலில் TCHAல் இருந்து வெளியேற்றப்பட்டார். தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டிருந்த போது யூன் 2, 2004ல் TCHA கட்டடத்தினுள் நுழைய முற்பட்ட ஜெயதேவன் கடுமையாகத் தாக்கப்பட்டு வெளியேவிடப்பட்டார்.

அண்மையில் எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் ராம்ராஜின் உதவியுடன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை மீளக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஜெயதேவனுக்கு எதிரான வர்கள் இறங்கி இருந்தனர். ஜெயதேவன் முழுமையாக அம்பலப்படுத்தப்பட்டு சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்

பட்டு செயலற்றவராக இருந்தபோதே வன்னியில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது.

## கைமாறும் ஈழபதீஸ்வரர் :

ஜெயதேவன் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது ஜெயதேவனின் கட்டுப்பாட்டில் இருந்த ஈழபதீஸ்வரர் ஆலயத்தை ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் நா சீவரத்தினம் (68) பொறுப்பேற்றார். ஜெயதேவன், விவேகானந்தன் ஆகியோரிடம் இருந்து பலாத்காரப்படுத் தப்பட்டே கையெழுத்து பெறப்பட்டு ஆலயம் கைமாற்றப் பட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. ஜனவரி 08 ல் ஈழபதீஸ்வரர் பெயர்ப்பலகை கீழிறங்க சிவயோகம் பெயர்ப்பலகை மேலேறியது.

சீவரத்தினம் உட்பட ஆலயத்தை கை மாற்றுவதில் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் ஸ்ரீகாந்தா அன்கோ சட்ட நிறுவனம் என்பன சட்டச்சிக்கலுக்குள் மாட்டுப்பட்டுள்ளனர். இதனால் சீவரத்தினம் சம்பந்தப்பட்ட சிவயோகம், இலண்டன் தமிழ் நிலையம் என்பனவும் இச்சிக்கலுக்குள் இழுக்கப்படும் அபாயம் உள்ளது. இது கிரிமினல், மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்கான விசாரணையாகவும் அமையலாம் என்ற நிலை ஏற்பட்டு உள்ளது. அப்படி ஏற்படும் பட்சத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் இன்றியும் சம்பந்தப்பட்ட நபர்களைத் தடுத்து வைக்க முடியும். சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இழுத்து மூடமுடியும்.

தற்போதைய ஈழபதீஸ்வரர் ஆலயம் உள்ள கட்டிடம் தொழிற்கட்சிக்கு சொந்தமானது. அதனை ஜெயதேவனுக்கு தொழிற்கட்சி குத்தகைக்கு விட்டிருந்தது. ஆனால் சீவரத்தினம் துணைக் குத்தகைப்பத்திரம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார். ஆனால் இது சட்டவிரோதமானது. அதனால் சிவயோகம் பெயர்ப்பலகை கீழிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது ஈழபதீஸ்வரருக்கு பெயர்ப்பலகை எதுவுமில்லை. இதற்கிடையே ஆலயத்தில் இருந்த நகைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் என்பன சீவரத்தினத்தின் குடும்பத்தவர்களால் கைப்பற்றப்பட்டதாக இன்னொரு செய்தி தெரிவிக்கிறது. ஈழபதீஸ்வரர் அம்மணமாக வீற்றிருக்கிறார். மேலும் குத்தகைக்காலம் இவ்வாண்டு ஓகஸ்டில் முடிவடைவதால் சிக்கலுக்கு உள்ளான இவ்விடத்தின் குத்தகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமல் போகலாம் என்றும் அஞ்சப்படுகிறது. இதனால் சாமியும் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்படலாம். இந்நிலையில் மேன்மைகொள் சைவநீதி எப்படி விளங்கும் என பக்தர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

## சர்ச்சைக்குரியவராகிறார் சீவரத்தினம் :



சீவரத்தினம் வி.புலிகளின் சர்வதேச செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்தவர். ஆனால் மணவாழ்க்கைக்கு புறம்பான செயற்பாடுகளாலும் நிதிக்கணக்கில் ஏற்பட்ட பிரச்சினை களினாலும் தொண்ணூறுக்களில் காலம் சென்ற கேணல் கிட்டு சீவரத்தினத்தை ஓய்வெடுக்கும் படி வீட்டுக்கு அனுப்பிவிட்டார். மேலும், சில ஆலயங்களில் சீவரத்தினம் அங்கத்தவராக இருந்து வெளியேறினார் அல்லது வெளியேற்றப்பட்டார். அதன் பின் தானே ரூற்றிங் முத்துமாரிஅம்மன் ஆலயத்தை உருவாக்கி அதன் தலைவராக உள்ளார். இந்த ஆலயத்தின் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட ஆண்டு வருமானம் £346,249.00 ஆகும். பொது ஆலயமான போதிலும் 15 வருடங்களுக்கு தலைவராக தானே இருக்கும் வகையில் ஆலய யாப்பையும் சீவரத்தினம் வடிவமைத்து உள்ளார்.

கணக்காளரான சீவரத்தினம் தனது 32 வருட திருமண உறவை 1990ல் தனது 53வது வயதில் முறித்துக் கொண்டார். பின்னர் ஜெயதேவனின் சகோதரி மீது; மணமான இளம்தாய் மீது காதல் வயப்பட்டு திருமணம் செய்து கொண்டனர். ஒருசமயம் சீவரத்தினத்தை ஜெயதேவன் தாக்கியும் இருந்தார். இந்த உறவு சீவரத்தினம் வி.புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளராக இருந்த போதே ஏற்பட்டது. தற்போதைய இளம் மனைவியும் அப்போது அங்கே பணியாற்றினார்.

சிவயோகம் என்ற ஒரு மலரை பொதுப்பணத்தில் £12,000 செலவில் 2001ல் வெளியிட்டார் சீவரத்தினம். அந்நூலில் தன் சுயசரிதையையும் புகழையும் எழுதி உள்ளார். மேலும் பதவிக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பொறுப்புகளை எடுத்துக் கொள்பவர்கள் தாமும் செயற்திறனுடன் செயற்படாமல் அப்படிச் செயற்பட முற்படுபவர்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் வழிவிடுவதில்லை போன்ற குற்றச்சாட்டுகளும் சீவரத்தினத்தின் மீது உள்ளது.

## கூடேறுகிறது லண்டன் தமிழ் நிலையம் :



2004 பிற்பகுதியில் இலண்டன் தமிழ் நிலையத்தின் (வெம்பிளி - சட்பறி தமிழ் பாடசாலை) தலைமைப் பொறுப்பை சீவரத்தினம் பெற்றுக் கொண்டது பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது. சீவரத்தினம் பொறுப்பேற்பதை டொக்டர் இ நித்தியானந்தன் விரும்பாவிடினும் மறைமுகமாக அவரும் ஒரு காரணமாகியுள்ளார்.

இலண்டனில் இயங்கிய இரத்தினம் பவுண்டேசனை தாயகத்துக்கும் விரிவுபடுத்தி பெயரைச் சம்பாதித்துக் கொள்ளவிரும்பினார் நித்தியானந்தன். லண்டன் இம்பீரியல் கல்லூரி பல் மருத்துவத்துறையின் தலைவரான டொக்டர் ராஜராஜசோழனின் (டொக்டர் நித்தியானந்தனின் கல்லூரி நண்பர்.) மகன், டொக்டர் நித்தியானந்தனின் மகன் ஹரோக் கல்லூரி மாணவர்கள். நண்பர்கள். (இவர்கள் மார்க்கிரட் தட்சரின் மகன் மார்க் தட்சரின் கல்லூரி நண்பர்களும் கூட.) இவர்கள் சுனாமிக்கு தமது நிறுவனங்களுக்கூடாக சேர்த்த பல்லாயிரம் பவுண்களையே

டொக்டர் நித்தியானந்தன் வன்னிக்கு எடுத்துச் சென்று கொடுத்தார். பல்லாண்டுகால அஞ்ஞாதவாசத்திற்கு பின் சீவரத்தினத்திடம் கடிதம் பெற்று வன்னி சென்று பணத்தை கையளித்துத் திரும்பினார். கைமாறாக சீவரத்தினம் பாடசாலைக்குள் நுழைவதை எதிர்க்காமல் அனுமதித்தார்.

சீவரத்தினம் மாணவர்களுக்கு முன்மாதிரியான ஒருவர் அல்ல என்பது பெற்றோர்கள் குறிப்பாகத் தாய்மார்களின் நிலைப்பாடாக உள்ளது. இதே கருத்து நிர்வாக உறுப்பி னர்களிடமும் நிலவுகிறது. தற்போது தமிழ் நிலையத்தின் கூட்டங்களில் வாக்குவாதங்கள் கனல் பறக்கிறது. சீவரத்தினம் தமிழ் நிலையத்தின் யாப்பை மாற்ற முற்பட்டு அது தற்போது எரியும் பிரச்சினையாகி உள்ளது.

## சட்ட ஒழுங்கை மீறுவது கண்டிக்கத்தக்கது :

ஜெயதேவனுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் பிரித்தானிய நாட்டுச் சட்டத்தின் பிரகாரம் மட்டுமே எடுக்கப் பட வேண்டும். அதற்குப் புறம்பான எந்த நடவடிக்கையும் அநீதியானது. கண்டிக்கத்தக்கது. இந்த நாட்டில் வாழ்ந்த ஒருவரை தடுத்து வைப்பதோ சித்திரவதைக்கு உள்ளாக்கு வதோ இந்நாட்டு சட்ட ஒழுங்கில் தலையிடுவதாகவே அமையும். அப்படிப் பலர் உள்ளனர். இவர்கள் எல்லோரை யும் வன்னிக்கு அனுப்பியா விசாரிக்க முடியும்? பிரச்சினை களுக்கு குறுக்கு வழியில் தீர்வு காண முற்படுவது விவேகமானது அல்ல.

ஜெயதேவன் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்றவர் அல்ல. ஆனால் இந்த நாட்டில் காலவரையறை இன்றி வாழும் அனுமதியைக் கொண்டுள்ளார். ஜெயதேவன் பல்வேறு குற்றங்களை இழைத்திருந்தாலும் விசாரணை என்று வரும் போது தனது பக்க நியாயங்களை சுதந்திர மாக முன் வைக்க அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் ஜெயதேவன் சம்பந்தப்பட்ட அமைப்புகள் பிரித்தானியாவி லேயே உள்ளன. சம்பந்தப்பட்ட நபர்களும் பிரித்தானியா விலேயே உள்ளனர். ஜெயதேவன் மீதான குற்றச்சாட்டுக ளும் பிரித்தானியாவிலேயே இடம்பெற்று உள்ளது. ஆகவே ஜெயதேவன் பற்றிய வழக்கு விசாரணைகள் பிரித்தானிய சட்ட முறையாலேயே தீர்க்கப்பட முடியும். அவ்வாறே தீர்க்கப்பட வேண்டும்.

## சால்மன்ருஸ்டி ஆக்கப்பட்டார் ஜெயதேவன் :

இலண்டனில் ஜெயதேவனின் சகாப்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. ஜெயதேவன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதிமன்றத் தீர்ப்புகள் அவருக்கு எதிராகவே அமைந்தது. TCHAல் பதவி பறிபோயிருந்தது. ஈழ பதீஸ்வரர் ஆலயத்தை கைப்பற்றும் முயற்சியில் மு சிவராஜா ஈடுபட்டிருந்தார். தற்போதைய சம்பவம் எதுவும் நடந்திருக்காவிட்டால் ஜெயதேவனின் சகாப்தம் சத்தம் சந்தடியில்லாமல் முடங்கி இருக்கும்.

ஆனால் வன்னியில் தடுத்து வைத்ததன் மூலம் வி.புலிகள் ஜெயதேவனை ஒரு சால்மன்ருஸ்டியாக ஆக்கி






உள்ளனர். அத்தோடு தமது அமைப்பின் பெயரையும் களங்கப்படுத்தி உள்ளனர். இந்தப் பெருமையெல்லாம் லண்டனில் இருந்து மூட்டிக் கொடுத்தவர்களையே சாரும். இலண்டனில் இருந்து புலிகளின் வாலை ஆட்டிய ஜெயதேவன் இன்று புலிகளின் குகைக்குள் சென்று திரும்பியவராக புலிகளுக்கு எதிரான ஊடகங்களால் கணிக்கப்படுகிறார். ஜெயதேவன் இனிமேல் அந்த அணியில் மட்டுமே நிற்க முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளார். இதனால் ஜெயதேவனின் தளம் முன்னரிலும் உறுதியாக்கப்பட்டுள்ளது. மேலும் ஜெயதேவ னிடம் இருந்து பறிக்கப்பட்ட ஆலயமும் TCHA பதவியும் கூட ஜெயதேவனால் மீளக் கைப்பற்றப்படலாம்.

ஈழபதீஸ்வரர் ஆலயம், TCHA எனபவற்றில் ஜெயதே வன் தலைமைத்துவத்தை எடுக்கக் காரணம் எதிரணியில் இருந்தவர்களின் பலவீனமும், பயமும் தான். ஜெயதேவன் வன்னியில் தடுத்து வைக்கப்பட்டதும் தண்ணி அடித்து கொண்டாடியது இங்குள்ள ஜெயதேவனின் எதிரணி. ஆனால் ஜெயதேவனின் பலம் மதிப்பிடவில்லை.

இதுவரை ஜெயதேவனது நடவடிக்கைகளை கடுமை யாக விமர்சித்தவர்களும் அண்மைய சம்பவங்களுக்குப் பின் தமது நிலையை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். காரணம் ஒருவரை சட்டவிரோதமாகத் தடுத்துவைப்பதையோ, சித்தி ரவதைக்கு உட்படுத்துவதையோ எக்காரணத்துக்காகவும் ஆதரிக்க முடியாது. மேலும் ஜெயதேவனுடைய விடயத் தில் பிரதானமாக சம்பந்தப்பட்டுள்ள ராம்ராஜ், சீவரத்தினம் மற்றும் ஏனையவர்கள் பற்றிய சமூக மதிப்பீடும் மோசமா னதே. ஜெயதேவன் குற்றமிழைக்காதவருமல்ல எதிரணி யில் நின்றவர்கள் நிரபராதிகளும் அல்லர்.

தமிழீழ அரசாங்கப் பொறுப்பை ஏற்கும் கட்டத்தில் உள்ள வி.புலிகள் கடத்தல், தடுத்து வைப்பு போன்ற செயல்கள் மூலம் கீழிறங்கி ஒரு இராணுவக் குழுவாகவோ மபியாக் குழுவாகவோ தங்களை அடையாளம் காட்டுவது வளர்ச்சியைக் காட்டாது. அரசாங்கத்துக்கான பண்புகளை வெளிப்படுத்தி தங்கள் குறிக்கோளுக்கு சர்வதேச சமூகத் தின் ஆதரவை வென்றெடுக்க வேண்டிய தருணம் இது. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் சட்ட ஒழுங்குகளை மதிக்க வேண்டிய கடமைப்பாடு வி.புலிகளு க்கு உண்டு. இது சர்வதேசவிதிகளுக்கும் அமைவானது.❑

# குருக்களுக்கு 12 ஆண்டுகள் சிறை : முற்பிறப்பு மனைவி மீது இப்பிறப்பில் பாலியல் பலாத்காரம்



குற்றவாளியான குருக்கள் ராமநாதன் சோமநாதன்

ராமநாதன் சோமநாதன் (41) என்ற குருக்களுக்கு பாலியல் பலாத்காரம் புரிந்தமைக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. பெப்ரவரி 18ல் இவரது 12 ஆண்டுகால சிறைத் தண்டனை ஆரம்பித்தது. தொரன் ரன்கீத் சிவகந்தகிரி முருகன் ஆலயத்தில் குருக்களாக இருந்த வேளை இரு தடவைகள் பாலியல் பலாத்காரம் புரிந்தமைக்காக இத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. புவனேஸ்வரி (29) (பெயர் மாற்றப்பட்டு உள்ளது) என்ற பெண்ணை யூலை 2002இலும் நவம்பர் 2003இலும் ராமநாதன் சோமநாதன் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி உள்ளார்.

யூலை 11 2002ல் புவனேஸ்வரியின் பிளாற்றுக்குச் சென்ற குருக்கள் அவரை கையில் இறுக்கிப் பிடித்தபடி தனக்கு புவனேஸ்வரியில் உரிமை இருப்பதாகவும் புவனேஸ்வரி போன பிறப்பில் தனது மனைவி என்றும் அவரை காதலிப்பதாகவும் கூறி உள்ளார். புவனேஸ்வரி உடன்பட மறுத்த போது அது தெய்வ குற்றம் என்றும் கடவுளை கோபப்படுத்தும் என்றும் கூறி குருக்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி உள்ளார். புவனேஸ்வரி கெஞ்சி மன்றாடிய போதும் குருக்கள் விடவில்லை. தனது இச்சையைத் தீர்த்துக்கொண்ட பின் உனது வாழ்க்கையில் நீ அதிஸ்டசாலியாக இருப்பாய் என குருக்கள் தெரிவித்துள்ளார். சமூகத்துக்கும் குருக்களின் பயமுறுத்தலுக்கும் அஞ்சி தனக்குள்ளேயே இவர் இச்சம்பவத்தை புதைத்து வருந்தியுள்ளார்.

நவம்பர் 2003ல் மீண்டும் புவனேஸ்வரியின் வீட்டுக்கு வந்த குருக்கள் இன்னுமொரு தடவை பாலியல் வல்லுறவு கொண்டுள்ளார். இதனால் கர்ப்பமடைந்த புவனேஸ்வரி கருக்கலைப்புச் செய்து கொண்டுள்ளார். மேலும் இக் காலகட்டத்தில் புவனேஸ்வரி தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்த குருக்கள் புவனேஸ்வரி தன்மீது ஆர்வம் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார். புவனேஸ்வரி தன்னை பாலியல் உறவுக்குத் தூண்டியதாக கூறிய குருக்கள் போன பிறப்பு காதல் கதையெல்லாம் புவனேஸ்வரியே கூறியதாகவும் தெரிவித்தார். புவனேஸ்வரி கர்ப்பமடைந்தது எதுவும் தனக்குத் தெரியாது எனவும் குருக்கள் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

மேலும் இக்குருக்களின் பாலியல் சேட்டைகளுக்கு உள்ளாகிய இரு பெண்கள் சமூக அவமதிப்புக்கு உள்ளாக நேரும் என்பதால் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்று அரசதரப்பு வழக்கறிஞர் குறிப்பிட்டார். ஆலயத்தின் 3 உறுப்பினர்கள் குருக்களின் தகாத நடத்தை ஒழுங்கு பற்றி சாட்சியமளித்தனர். வழக்கின் போது பாதிக்கப்பட்ட ஒரு பெண் முன்வந்து குருக்களுக்கு எதிராகச் சாட்சியம் அளித்துள்ளார்.

ஆலயத்துக்கு வரும் பெண்களுடன் குருக்கள் பழகும் முறையில் சந்தேகம் ஏற்பட்டதனால் குருக்களின் வேலை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை என ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நிர்வாகத் தலைவர் சீவரத்தினம் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

“குருக்கள் என்னுடன் நிற்கப் போவதில்லை. அவர் மற்றைய பெண்களையும் கற்பழிப்பார். என்னை யாரும் காப்பாற்றவில்லை. ஆனால் கோயிலுக்குப் போகும் மற்றப் பெண்களை நான் காப்பாற்றி உள்ளேன்” என தீர்ப்பின் பின்னர் புவனேஸ்வரி தெரிவித்தார்.

சிவகந்தகிரி ஆலயம் வெஸ்டன் ஜீவலர்ஸ் உரிமையாளர் சிவசுந்தரத்தின் சொத்தாக இருந்தது. பாலியல் வல்லுறவு பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து ஆலயம் கோபி என்பவருக்கு விற்கப்பட்டது.

ஆலய செயலாளர் இராசலிங்கம் இத்தீர்ப்புப் பற்றி குறிப்பிடும் போது “இந்தத் தீர்ப்பில் அப்படி ஒன்றும் அதிசயம் இல்லை. பல வழக்குகளில் பெண்கள் தங்கள் பூசை செய்யும் ஐயர்மாரைப் பற்றி கதைகளைக் கட்டி பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றனர்” என்று கூறுகிறார். சைவத்தை முன்னேற்ற சங்கம் அமைத்த ஒருவர் இது பற்றி குறிப்பிடுகையில் எல்லோரும் பிறந்தது காமத்தில் தான் என்று புதிய விளக்கம் அளித்துள்ளார்.

இவ்வாறான குற்றங்கள் ஆலயங்களில் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எதிராக இந்த சைவப் பெருமக்கள் வரிந்து கட்டி நிற்பது ஏன்? சோமநாதன், ஈஸ்ற்ஹாம் நாகநாதக் குருக்களின் தம்பி என்பதாலா என கேள்வி எழுப்புகிறார் ஒரு அடியார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வாறான ஒரு குற்றவாளியை பிணையில் விட்ட மறுநாளே பூசை செய்வதற்கு கோயில் நிர்வாகம் எப்படி அனுமதித்தது எனவும் கேள்வி எழுப்பினார்.

“குருக்களுக்கு 24-25 வயது திருமணமாகாத இளம் பெண்களில் ஆர்வம். அவர்களுக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும். அதனால் பொலிசார் குற்றத்தை பதிய நான் சம்மதித்தேன். இது எனது வாழ்க்கையை சீரழிக்கும் என்று எனக்குத் தெரியும். நான் இதற்காக மனம் வருந்தப் போவதில்லை” என்று உறுதியாகவும் தெளிவாகவும் கூறினார் புவனேஸ்வரி.❑



# சேது சமுத்திரத்திட்டம் : ஓர் இராணுவ விரிவாக்கம்



சா வேலு

சேது சமுத்திரத் திட்டம் எனப்படும் கப்பல் போக்கு வரத்திற்காக கால்வாய் வெட்டும் திட்டத்தினை ஆதரித் தும் எதிர்த்தும் அண்மைக்காலத்தில் பல்வேறு விவாதங் கள் கிளம்பியுள்ளன. இத்திட்டம் தமிழகத்தை முன்னேற் றுமா அல்லது கடல்வளமும், சுற்றுப்புறச் சூழலும் பாழ டைந்து அதனால் 12 இலட்சம் மீனவர்களின் வாழ்க் கையே கேள்விக்குறியாகுமா என்பதை இக்கட்டுரை ஆழமாகப் பரிசீலிக்கின்றது.

இத்திட்டத்தினைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு இக் கால்வாய் அமையவுள்ள கடல் பகுதியினையும் அதன் பூகோளத்தன்மையையும், அதில் வாழும் கடல்வாழ் உயிரினங்களையும், கடலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட மீனவ சமூகத்தைப் பற்றியும் நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

**சேது சமுத்திரத் திட்டம் அமைய உள்ள இடங்கள்** மன்னார் வளைகுடா, பாக் வளைகுடா, ஆதாம் பாலம் ஆகிய மூன்று பிரதேசங்களுமாகும்.

1. **மன்னார் வளைகுடா** : **இது இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் கடற்கரைக்குத் தெற்கே உள்ள இந்திய - இலங்கைக் கடற்பகுதியாகும். இது** இந்தியப் பெருங்கடலின் நீட்சியாகும்.

2. பாக் வளைகுடா : இராமேஸ்வரம், தலைமன்னார் கடற்கரைக்கு வடக்குப் பகுதி. இதன் **மேல் எல்லையாக கோடிக்கரையும் காங்கேசன் துறைத்துறையும் உள்ளன. இது இராமேஸ்வரம், தலைமன்னார், கோடிக்கரை, காங்கேசன்துறை ஆகிய நான்கு துறைமுகங்களுக்கு இடைப்பட்ட இந்திய இலங்கைக் கடற்பகுதியாகும்.**

3. **ஆதாம் பாலம்** : இது மேற்கண்ட இந்த இரண்டு வளைகுடாவையும் பிரிக்கும், அதாவது பாம்பன் பாலம் முதல் தலைமன்னார் வரையுள்ள 17 குறுந்தீவுகளையும், கடலில் அமிழ்ந்துள்ள மணல் மேடுகளையும் கொண்டது. (இந்தப் பகுதியின் ஆழம் 3 முதல் 10 மீற்றர் மட்டுமே).

இந்த பாக் வளைகுடாவிற்கும் மன்னார் வளைகுடா விற்கும் இடையே உள்ள மிகப்பெரிய வேறுபாடு என்ன வென்றால், மன்னார் வளைகுடாப் பகுதி இந்திய இலங் கை கடற்பகுதிகளிலிருந்து ஒருசில கிலோமீற்றர்கள் கடலில் சென்றவுடனேயே அதன் கடல்தரை அதாவது கடல் ஆழம் 1,000 மீற்றரிலிருந்து 3,000 மீற்றராக அதிக ரித்து உள்ளது. அதற்கு நேர்மாறாக வளைகுடாப் பகுதி யில் கடல் தரையானது (கடல் ஆழம்) ஐந்திலிருந்து பத்து மீற்றர் மட்டுமே. இந்த பாக் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தியைக் கடந்து வங்கக் கடலில் தரையானது 1,000 மீற்றரிலிருந்து 2,000 மீற்றர் வரை உள்ளது.

ஆக, பாக் வளைகுடா என்பது தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் வங்கக் கடலையும், மன்னார் வளைகுடாவையும் (இந்தியப் பெருங்கடலையும்) பிரிக்கும் ஒரு மேட்டுப் பகுதி (அணை அல்லது சேது) எனலாம். மன்னார் வளைகுடாவின் கடல்தரையில் இருந்தும், வங்கக் கடலின் கடல்தரையில் இருந்தும் பாக் வளைகுடா என்ற மேட்டுப் பகுதிக்கு சுமார் 1,000 மீற்றர் உயரத்தில் எழுந்து நிற்கிறது. இந்த மேடான 5 மீற்றர் ஆழமுள்ள **கடற்பகுதியை ஆழப்படுத்தி உருவாக உள்ளதே இந்த** "சேது சமுத்திர கால்வாய்த் திட்டம்" என்பதாகும்.

அரபிக் கடலிலிருந்து வங்கக் கடலுக்குச் செல்லும் **கப்பல்கள், இலங்கையைச் சுற்றிச் செல்ல வேண்டியி ருப்பதால் இதன் பயண நேரத்தை 36 மணித்தியாலங்க ளால் குறைக்க (450 கி.மீ. தூரத்தைக் குறைக்க) ஒரு கடற்பாதையை செயற்கையாக ஏற்படுத்துவதே சேது** திட்டமாகும். இதற்காக ஆகும் திட்டச்செலவு இந்திய ரூபாயில் 2,000 கோடி ஆகும். இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும்.

## கால்வாய் அமையவுள்ள கடல்சூழல் :

**இந்தோ - பசுபிக் பகுதியில் அமைந்திருக்கும் மன்னார் வளைகுடா உலகின் கடல்வாழ் உயிர் வளத்தில் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். இங்கு வாழும்** உயிரினங்களின் தனித்துவத்தைக் கருத்தில்கொண்டு "தேசிய கடல்வாழ் உயிரின காப்பகம்" 1986இல் உருவாக் கப்பட்டது. இது தூத்துக்குடி முதல் இராமேஸ்வரம் வரையுள்ள 62,312 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 21 அழகிய பவளப்பாறைத் தீவுகளை உள்ளடக்கியது. யுனெஸ்கோவின் "மனிதனும் உயிர்கோளமும்" என்ற திட்டத்தின் கீழ் இது சிறப்பிடம் பெற்றுள்ளது. மேலும் ஐ.நா. உதவியுடன் இந்திய அரசு 140 கோடி மதிப்பில் இப்பகுதியில் உள்ள அரிய உயிரினங்களைப் பாதுகாக்க ஒரு திட்டத்தினை 2003ம் ஆண்டு முதல் நடைமுறைப்படு த்தி வருகின்றது.

# பவளப் பாறைகள்


துளசிச்செடி எவ்வாறு 24 மணி நேரமும் ஒக்சிஜனை வெளிப்படுத்துகின்றதோ அதே போல பவளப்பாறைகள் கரியமிலவாயுவை (காபனீரொக்சைட்டை) உட்கொண்டு சுத்தமான ஒக்சிஜனை உற்பத்தி செய்து ஓசோன் மண்டலத்தைப் பாதுகாத்து பூமியின் வெப்பத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

மீன் வளர்ச்சிக்கும் இது உதவுகின்றது. ஆண்டொன்றுக்கு 900 மி.மீ. மழையும் இதனால் பெறமுடிகின்றது. மேலும், அலைகளின் அலைவீச்சைத் தாங்கி இவை கடலரிப்பைத் தடுக்கின்றன. சதுப்புநிலக் காடுகள் (மாங்குரோவ்) எனப்படும் அலையாந்தி காடுகளின் வளர்ச்சிக்கும் இப்பவளப்பாறைகள் உதவி செய்கின்றன.

பங்களாதேசத்தில் சுந்தரவனக் காடுகள் எனப்படும் சதுப்புநிலக் காடுகளை அழித்ததால் 1991இல் ஏற்பட்ட புயலில் அந்த நாடு இரண்டு லட்சம் பேரைப் பலிகொடுத்தது. மேலும் அங்கு கடல்நீர் விளை நிலங்களுக்குள் புகுந்து நிலத்தின் தன்மை பாழ் பட்டு வேளாண்மை செய்யப்பயனற்ற நிலமாகிப் போனது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமியினால் இந்து சமூத்திரப்பிராந்தியத்தில் பவளப்பாறைகள் பெரும ளவில் பாதிக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

**Hexacorals**




a) coral polyp with expanded arms b) withdrawn polyp c) empty coral cup

இப்பகுதியில் உள்ள 21 பவளப்பாறைத் தீவுகளில் 137 வகைப் பவளப்பாறைகள் உள்ளன. உலகின் மொத் தவகை 160. அத்துடன் தெற்காசியாவிலேயே குட்டி ஈன்று பால்கொடுக்கும் கடல்பசு இனம் இப்பகுதியில் மட்டுமே காணப்படுகின்றது.3,600 கடல்வாழ் வகையினமும் 1.300க்கும் மேற்பட்ட மீன் இனங்கள், பவளம், முத்து, சிப்பி, சங்கு, கடற்பாசி, டால்பின், திமிங்கிலம், சுறா, கடலாமை, கடலட்டை ஆகியனவும் இங்கு உள்ளன.

மேலும், கடற்தாவரங்கள் அடங்கிய "மாங்குரோவ்" எனப்படும் சதுப்புநிலக் காடுகள் (அலையாந்தி காடுகள்) இப்பிரதேசத்தில் உள்ளன. இந்த வளைகுடாப் பகுதியில் ஏறத்தாள மூன்று இலட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன் இவர்களைச் சார்ந்து 12 இலட்சம் மீனவ மக்களும் உள்ளனர்.

இக்கால்வாய் அமையவுள்ள இடத்தின் பூகோளத் தன்மையை நோக்கின், இப்பகுதியானது புயல், சூறாவளி, பெரும் கடற்கொந்தளிப்பு ஆகியவை தோன்றும்மைய மாகும். அத்துடன் பல்வேறு பருவகாலங்களில் மணலும் சகதியும் இடம்பெயர்வதால் வருடத்திற்கு சுமார் 19,500 கன மீற்றர் சகதியும் மணலும் பாக் குடாவில் படிகின்றன. இதனால் ஆதாம் பாலத்தில் உள்ள மணல் மேடானது பாக் வளைகுடாவை நோக்கிய திசையில் வருடம் ஒன்றிற்கு 65 மிற்றர் வரை வளர்ந்து கொண்டிருக்கிறது. (தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) E1A, P2, P3). பாக் வளைகுடாவில் பல இடங்கள் மணலாலும், சேறாலும் மென்மேலும் மேடாகி வருகிறன. இந்த நிகழ்வு ஆதாம் பாலத்திலும் பாக் வளைகுடாவின் நடுமேற்கில் உள்ள மணல்மேல்குடியை ஒட்டிய பகுதியிலும், தலைமன்னாரை அடுத்தும், வேதாரண்யத்தை ஒட்டியும், யாழ்ப்பாணத்திற்கு மேற்கில் உள்ள பகுதிகளிலும் காணமுடிகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன.

வேதாரண்யக் கடற்கரையானது கடலை நோக்கி வருடத்திற்கு 29 மீற்றர் என்ற அளவில் வளர்வதுடன், இதன் வளர்ச்சிப் போக்கில் மதிப்பிட்டால், 12கி.மீ. தூரமுள்ள யாழ் நிலப்பகுதியுடன் இன்னும் 400 வருடங்க ளில் சேரக்கூடும். (முனைவர் இராமசாமி அறிக்கை).

மேலும் இங்கு ஏற்பட்ட புயலினால், கடல் கொந்தளிப் பினால், 1964இல் தனுஷ்கோடி தீவு அழிந்து ஆயிரக் கணக்கில் மக்கள் உயிரிழந்தனர். தமிழகத்தில் கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட 61 புயல்களில், 23 புயல்கள் இந்தக் கால்வாய்ப் பகுதியில் தான் ஏற்பட்டு உள்ளன. 1978இல் ஏற்பட்ட புயலால் இலங்கையில் மட்டும் 1000 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.


ஆக மொத்தத்தில் இந்தக் கால்வாய் திட்டம் எந்த அளவிற்கு நடைமுறையில் நீடித்து நிலைத்திருக்கும் என்பதே மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. தோண்டப்பட்ட கால்வாய் மேற்குறிப்பிட்ட காரணங்களால் மணல் மற்றும் சகதியினால் மேடாகும் என்பதே உண்மை.

## கால்வாய் மற்றும் கப்பற் போக்கு வரத்தால் ஏற்படும் விளைவுகள் :

சேது சமுத்திரக் கால்வாயை சூயஸ், பனாமா போன்ற கால்வாய்களோடு ஒப்பிடுகின்றனர். இது ஒரு அப்பட்டமான பிதற்றல். ஏனெனில், மேற்சொன்ன கால்வாய்கள் நிலத்தை வெட்டி இரண்டு கடல்களை இணைத்துக் கட்டப்பட்டவை. அதனால் நிலத்தினால் கால்வாய் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. (15 இலட்சம் எகிப்தியர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களில் 1,25,000 பேர் இக்கால் வாய் வெட்டும் பணியின்போது இறந்துபோனார்கள்).

கடல்சூழல் என்பது நிலத்தின் சூழல் போன்றதல்ல. கடலை ஆழப்படுத்துவதால் உண்டாகும் விளைவுகள்

நுணுக்கமாகக் கவனிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, நாம் கணிக்க முடியாத பாதிப்புகளையும் அவை ஏற்படுத்தக்கூடும்.





பாக் ஜலசந்தியும், மன்னார் வளைகுடாவும் உயிரியல்ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும். (கால்வாய் அமையவுள்ள பகுதியின் மொத்த அடிப்படை உற்பத்தியளவு ஒரு நாளுக்கு 142 முதல் 472 மில்லி கிராம்/கன செ.மீ. (NEERI Report).

பவளப்பாறைகள் மீது மணல்கள் படிந்தாலே அவை அழிந்துவிடும். இவை நுண்ணிய உயிர்களின் தொகுப்பாகும். இவற்றின் மீது விழும் சூரிய ஒளியினாலேயே இவை உயிர்வாழ்கின்றன. தோண்டப்படும் மணல் ஆழ் கடலில் கொட்டப்படும்போது நுண்ணிய உயிர்கள் அழியக் கூடும். இந்த நுண்ணுயிர்கள் தான் கடல் உயிரினங்களின் அடிப்படையாகும். இவை அழியநேர்ந்தால் ஒட்டுமொத்த கடலுயிர்களின் உயிர்ச் சுழற்சியிலும் சரிவைக் கொண்டு வரும். இதனால், கடல் வளத்தை மட்டுமே நம்பிவாழும் இலட்சக் கணக்கான மீனவர்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படக் கூடும். மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறும் அரசின் வாக்குறுதி நமக்குத் தெரிந்ததே. (சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றளவும் நிவாரணம் வழுங்கப்பட வில்லை).

இக்கால்வாய் அமைக்கும் திட்டத்தினால் பயனடையக் கூடியவர்கள் சர்வதேசக் கம்பெனிகளும், ஒப்பந்தக்காரர்களும், அரசியல் மற்றும் அரச அதிகாரிகளும் மாத்திரமே. மேலும், இக்கால்வாய் தோண்ட ஆரம்பிப்பது மீனவர்களுக்காகத் தோண்டப்படும் சவக்குழியே. இக்கால்வாய்த் திட்டத்தின்படி "மீன்பிடிக்க, கால்வாய் கடக்க அவர்களுக்கு நேரம் ஒதுக்கப்படும்" என்ற அரசின் வாக்குறுதி என்பது மீனவர்களின் மீன்பிடித் தொழிலில் அன்றாடம் தடைகளை ஏற்படுத்தி அவர்களின் உரிமையை பறிப்பதுடன், எதிர்த்துக் குரல்கொடுத்தால் "போலி மோதலில்" நடுக்கடலில் கொன்று வீசப்படுவதுதான் நடைமுறையாகும்.

இந்திய விரிவாக்கத்தின் நலனில் இத்திட்டம் அடி ஆழத்தில் புதைந்துள்ளது. இத்திட்டம் அமுலுக்கு வந்தால் இந்தியக் கடற்படை தனது சொந்தக் கடற்பகுதிக்குள்ளாகவே இயங்கமுடியும். இந்திய ஆட்சியாளர்களின் தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, அண்டை நாடுகளின் அச்சுறுத்தல் என்ற பெயரில் இதுவரை அண்டை நாடுக

இலங்கை - இந்திய கடற்பரப்பில் காணப்படும் ஆழம் குறைந்த பாக்கு நீரினை திட்டமிடப்பட்டுள்ள சேதுசமுத்திரத் திட்டப் பகுதி



ளை ஆக்கிரமித்தும், உள்விவகாரங்களில் தலையிட்டும் வந்துள்ளனர். 1948 காஷ்மீரை வலுக்கட்டாயமாக இணைத்தது. 70களில் பாக்கிஸ்தானை துண்டுபடுத்தி பங்களா தேஷை உருவாக்க இந்திய மத்திய அரசு தனது இராணுவத்தை அனுப்பியது. ஈழவிடுதலையை ஒடுக்க 1987இல் இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பியது. இன்று பங்களாதேஷ், பர்மா எல்லைகளுக்குள் அராஜகமாக ஊடுருவி "உல்பா" போராளிகளை வேட்டையாடுவது எனத் தெற்கு ஆசியாவின் தாதாவாக இந்தியா வலம்வருகின்றது.

மேலும், கடற்கரைப் பகுதிகளில் அமையவிருக்கும் அணுமின் நிலையங்கள், ஏவுகணைத் தளங்கள் எனத் தனது இராணுவரீதியான செயல்திட்டங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், இந்திய விரிவாக்க நலனுக்கு இந்த சேது கால்வாய்த் திட்டம் மூலஉத்தி ரீதியில் ஒரு அத்தியாவசியத் திட்டமாக இருக்கின்றது. மேலும், இதனால் இலங்கையில் ஏற்படும் மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், அச்சத்தையும் தவிர்க்க இந்தியா 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடன் உதவியாக வழங்கி, இலங்கையில் தற்போது உள்ள நெருக்கடி சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயல்கின்றது.❑

உசாத்துணை :
போராளி, அக்டோபர் - டிசம்பர் 2004.
இணையத்தள தரவுகள் தொகுப்பு.

**இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெறுவதற்கு நீங்களும் சந்தாதாரர் ஆகுங்கள்.**
**தொடர்புகளுக்கு :**
Thesam, P O Box 35806
E11 3JX, London, UK
Tel : 0208 279 0354

# பெண்களும் சமூகக் கட்டமைப்பும்

விஜி



மனித குலமானது பல்வேறு படிமுறைகளினூடாக வளர்ச்சியடைந்தே இன்றைய நிலையை எட்டியுள்ளது. குகைமனிதராக காட்டுமிராண்டி நிலையிலிருந்து இலை குழைகளை ஆடைகளாய் அணிந்து முன்னேறிய மனித குலம் ஆரம்ப நிலையில் ஏற்றத் தாழ்வுகள் அற்றதாக இருந்தது. அத்தகைய சமூகம் ஆதிப் பொதுவுடைமைச் சமூகம் என்று அழைக்கப்பட்டது. பின்நாளில் மனித சமூகம் ஆண்டான் - அடிமை, நிலப்பிரபுத்துவம் (மன்னர் ஆட்சி), முதலாளித்துவம் என வளர்ந்து வந்துள்ளது.

மனிதகுலத்தின் தொடக்க காலமானது பெண் தலைமையேற்று வழிநடத்திய ஒரு சமூகமாக இருந்து உள்ளது. பெண்ணே கடுமையான உழைப்பில் ஈடுபட்டுத் தன்னைச் சார்ந்தவர்களைப் பாதுகாத்தாள். வேட்டையாடுதல். வேட்டையாடிய உணவைப் பங்கிடுதல். இடம் நகர்தல், தனது இனக்குழுவின் சார்பில் முடிவுகளை எடுத்தல் போன்றன பெண்ணின் முதன்மைப் பணிகளாக இருந்துள்ளன. இத்தகைய முதன்மைநிலையில் இருக்க, பெண்ணிடம் இயற்கையாக அமைந்திருந்த பல தனித்துவமான பண்புகள் காரணமாய் இருந்துள்ளன. இத்தகைய பெண் முதன்மை பெற்ற சமூகம் `தாய்வழிச் சமூகம்' எனப்பட்டது.

குழந்தைப்பேறு, குழந்தையின் உயிர்ப்பாதுகாப்பு, பராமரிப்பு, அதன் வளர்ச்சி என்பன பெண்ணைச் சார்ந்ததாக இருந்தது. காலப்போக்கில் பெண் இந்த நிலைமைகளின் தேவையால் வீட்டில் அதிகம் தங்கியிருக்கும் சூழ்நிலை உருவாகியது. ஆண்மகன் வேட்டையாடி விவசாயம் செய்து உணவுதேடும் வேலையை எடுத்துக் கொண்டான். அதாவது ஆண்களும் பெண்களும் தமக்கிடையே வேலைகளைப் பகிர்ந்து கொண்டனர். இந்த வேலைப் பகிர்வே பெண் பின்னாளில் அடிமைப்பட வழிவகுத்தது.

பெண் செய்த அன்றாட வேலையானது அவளுக்கு பொருளாதாரரீதியான பலன் எதையும் தரவில்லை. மாறாக ஆண் மேற்கொண்ட வேட்டையாடலும், விவசாயமும் அவனுக்கு மேலதிக செல்வத்தைத்தர, பொருளாதார வலிமை பெற்ற ஆண் பெண்ணைத் தனது கட்டுப்பாட்டுக்குள் இருத்தினான். கூடவே தன் மிதமிஞ்சிய செல்வத்தை யாருக்குக் கொடுப்பது என்ற கேள்வி எழுந்தபோது, தனது நேரடி வாரிசை உருவாக்கவென ஒருதார மணமுறையை ஏற்படுத்தினான். இதன் வழி உலகின் முதல் அடிமை வர்க்கம் பெண்களேயாவர்.

பெண்ணே மனிதப் பண்பில் மிக உச்ச நிலையில் இருப்பவளாவாள். ஆணின் பேராசையும், பொறாமையும், கள்ளத் தனமும், சோம்பேறித்தனமும் இன்றைய உலகை ஆட்டிப்படைப்பன வாகும். அன்று தொட்டு இன்று வரை உலக யுத்தங்கள், இயற்கை அழிவுகள் இதற்குத் தக்க சான்றுகளாக இருந்து உள்ளன. நமது இலக்கிய, இதிகாசங்கள் கூட, சீதை மீது இராவணன் கொண்ட தகாத ஆசையால் இராமாயண யுத்தமும், பாண்டவரும் கௌரவரும் மண்மீது கொண்ட பேராசையால் பாரத யுத்தமும் தோன்றியதாகப் பேசுகின் றன. ஆனால், அந்த ஆண்களின் உலகமோ மிகவும் வஞ்சகத்தனமாக 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' எனப் பெண்களைக் குற்றக் கூண்டில் நிறுத்திவிடுகின்றது.

பெண்ணுக்கு இயற்கை அளித்த கொடை, அவளது தனித்துவமான உடல் அமைப்பாகும். உலகின் எந்த இனமும் தொடர்ச்சியாக நிலைபெற அவ்வுயிரினம் தன் இனத்தைப் பெருக்குவது இயற்கையின் மாறா விதியாகும். இதன் அடிப்படையில் குழந்தைப்பேற்றை ஆபத்தின்றி நிகழ்த்தவும், பிறந்த குழந்தையை உணவூட்டிப் பராமரித்து வளர்க்கவும் ஏற்றாற்போல பெண்ணின் உடலமைப்பு அமைந்துள்ளது. இயற்கை மிக்க கவனத்துடன் பெண்ணின் உடலையும் உயிரையும் மேலானதாகப் படைத்து உள்ளது. ஆனால் இந்த உலகமோ அவளின் இடையையும், மார்பையும், வெறும் சதைப்பொருளாக, வியாபாரப் பண்டமாக மாற்றிவிட்டது.

பெண்ணின் உடலைக்காட்டி பொருட்களை சந்தைப் படுத்தி பெரும் இலாபமீட்டுவதில் இச்சமூகம் வெட்கப்படுவதில்லை. பெண்ணின் உடலை கதை, கவிதை, சினிமா என்று எல்லா இடங்களிலும் ஆபாசமாக வர்ணனை செய்து எழுதிப்பிழைப்பு நடத்துகின்றது. கலை என்ற பெயரில் மோசமான அசைவுகளோடு ஆடவிட்டுப் பணம் பண்ணுகின்றது. மொத்தத்தில் பெண்ணின் உடல் என்பது முதலீடாகவும், நுகர்வப் பண்டமாகவும் மட்டுமே பார்க்கப் படுகின்றது. இதற்கு மிக அருகில் உள்ள உடனடி ஆதாரங்களில் ஒன்று எங்கள் வீடுகளில் உள்ள `இசைத்தென்றல்கள்' ஆகும். எங்கும், எதிலும், எப்படியும், எப்போதும் பணம் பண்ணப் பார்க்கும் இக்கொடிய சமூக அமைப்பே இங்கு குற்றத்துக்குரியதாகும்.

மனிதகுலமானது சிந்தனை, உழைப்பு எனப் பிற விலங்கினங்களிடமிருந்து வேறுபடும் உச்சநிலைக் குணாம்சங்களைக் கொண்டதாகும். மனிதர்களிடையே

# பெண்ணுள்

மாஜிதா

கொஞ்ச வார்த்தைகள்
கருக்கட்டின
உடல் ஒத்துப்போகவில்லை
மனமில்லை
ஊன்றியும் பார்க்கவில்லை

மென்மை
பெண் அங்கங்கள்
வெண்ணெயில்
செதுக்கிய உடல்
இளமை
மெதுவாகப் போர்த்தி..

சிந்தனை
நெஞ்சுரம்
திறமை
கொள்கை
பெண்ணில் புதைந்துள்ளன
அற்புதம்!

உன்
பிறப்புப் பற்றி
ஏங்குகின்ற பெண்ணினமே
காதல்
கருக்கொண்டு
காத்திருந்து
பூரித்துப் போகின்ற

உன் உணர்வு
ஆண்
தவமிருந்தும்
கிடையாது

பெண்ணின் சக்திகள்
பொறாமையுமாகி
விழித்தல் - கேட்டல்
மணத்தல் - ருசித்தல்
உணர்தல் மட்டுமல்ல
பகுத்தறிதலும் பரந்து
பாலியல் மட்டுமா?
உணர்வு

பிரபஞ்சத்தில் உயிர்ப்பு
உறைந்து கிடந்து
கண்களும் செவிகளும்
மூக்கும் நாவும்
உணர்வு கொண்ட
தோல்முடியும்
ஏனோ
ஏழ்மைக் காவல் செய்கின்றன.

உழைப்புத் திறனும், சிந்தனைத்திறனும் கொண்ட அரைப்பங்கினர் பெண்களாவர். ஆயினும், நீண்ட நெடுங் காலமாக உலகம் முழுதும் அவர்கள் துன்பத்துள் உழன்று வாழ்கின்றனர். மனிதரின் பொதுப்பண்பாகிய உழைப்பின் பலன் சமமாகப் பங்கிடப்படாத வரைக்கும் பெண்களுக்கு மீட்சி இல்லை. அத்தகைய சமூக அமைப்பு உருவாகும்போது பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் விடுதலை அடைவார்கள்.

மாறாக, நம்மில் பலர் நினைப்பது போல தலைமுடியைக் குட்டையாக வெட்டுதல், ஆண்களைப்போல் ஆடை அணிதல், புகை, மது, போதைப்பழக்கம் என்பவற்றில் ஈடுபடுதல் பெண்களுக்கான விடுதலை அல்ல. குழந்தைப் பேறு, குழந்தைப் பராமரிப்பு, வீட்டுவேலை போன்றவற்றில் ஈடுபடுவதால் மாத்திரம் பெண்கள் தரம் குறைந்தவள் என்று கருதுவதும் தவறானதாகும். தரம் குறைந்த எதுவும் (பெண்கள் எதற்கும் லாயக்கற்றவர்கள் என்பதுதான் பொதுவாக ஆண்களின் எண்ணமாகும்.) இயற்கையின் விதியில் நிலைபெற்று வாழ்வதில்லை. பெண் இவ்வுலகிற்குத் தேவையற்றவளா? கூடிவாழும் இயல்புடைய சமூகத்தில் சமூகப் பிராணியான மனிதர்களிடையே ஆணும் பெண்ணும் தனித்து வாழ்தல் கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும். அன்பும், தோழமையும், அர்ப்பணிப்பும், நேர்மையும் கொண்டு ஆண்களும் பெண்களும் வீட்டையும், நாட்டையும் கட்டியெழுப்ப முயல்வோம்.❑

# ஜேர்மனியில் தொழிற்சங்கத்துக்கான போராட்டம்



மார்ட்டின் ஜெயராஜ்

Heidelberg என்பது ஜேர்மனியின் Boden Wurttemberg மாநிலத்தின் பெரிய நகரங்களில் ஒன்று. பல வெளிநாட்டவர்களையும், பழமைவாய்ந்த வரலாற்றுச் சான்றுகளையும் தன்னகத்தே கொண்ட இந்நகரம் சுறுசுறுப்பாகத் தினமும் இயங்கிக் கொண்டிருக்கும்.

இந்த நகரத்தின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் Mc Donald's விரைவு உணவுவிடுதிகள் நான்கும் கடந்த இருபத்திமூன்று வருடங்களாக வியாபாரத்தில் கொடிகட்டிப் பறக்கின்றது. இதன் நிறுவநர் Dr. Giovanelli Gmbh வியாபாரத்தில் பல வெற்றிகளைக் கண்ட பிரபல்யமானதொரு தொழில் அதிபராகக் கருதப்படுபவர். Mc Donald's மாத்திரமன்றி பல நிறுவனங்களின் உரிமையாளராகவும் இவர் இருக்கின்றார். சமூகத்தில் பிரபல்யமான இந்தத் தொழில் அதிபர் ஐந்து தொழிலாளர்களுக்கெதிராக தொடுத்த வழக்கு பாரிய தோல்வியைத் தழுவிக்கொண்டது.

வணிக சாம்ராஜ்யத்தினை வெற்றிகொண்ட குட்டி முதலாளியான இத்தொழிலதிபர் தன்னுடைய தொழிலாளர்களின் உணர்வுகளை பொருட்படுத்தாமையும் உயர் அதிகாரிகளின் பக்கச்சார்பான கருத்துக்களை மட்டும் ஒரு தலைப்பட்சமாக் நம்பி அதிக தொழிலாளர்களை நியாயமற்ற முறையில் வேலைநீக்கம் செய்தவர். பணத்தின் துணையும், அந்தஸ்து, மற்றும் போலிக்காரணங்களை முன்வைத்து ஜேர்மன் நீதிமன்றங்களில் பல ஆண்டுகளாக வழங்கப்பட்ட தீர்ப்புகளை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவர். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட எழுச்சி பூர்சுவாக்களின் சிம்மாசனங்களை சிதைத்து நடுங்கவைத்த முன்னைய வரலாறு இங்கேயும் எம்மவரால் மீள எழுதப்பட்டுள்ளது.

நீண்டநாட்களாக அடக்கி ஒடுக்கப்பட்ட Mc Donald's தொழிலாளர்களின் மனக்குமுறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன், அவர்களைச் சுரண்டி வாழும் தொழில் வழங்குநருக்கு எதிராக எழுந்து நின்று போராடுவதற்கு வசதியாக எமக்கென்றொரு தொழிற்சங்கத்தினை இங்கே அமைப்பதற்கான வேலைகள் Mr. Amrudin Kreho, Mr. Martin Jeyaraj, Mr. Amin Mustar போன்றவர்களால் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பெண் தொழிலாளர்களின் சார்பாகவும் Miss Irene Marina போன்றோர் முன்வந்து இணைந்து கொண்டனர்.

வெளிநாட்டவர்களுக்கு புலம்பெயர்ந்த நாடுகளில் தொழில்வாய்ப்புப் பெறுதல் என்பது இன்றியமையாத தேவையாக உள்ளது. மிகுந்த பொறுப்புணர்வுடன் நேர்மையாக நவீன அடிமையாக தொழிற்சாலைகளில் தமது வாழ்வின் வளமான பெரும்பகுதியை அர்ப்பணித்தும் கூட நியாயமற்ற முறையில் தனிப்பட்ட அற்ப காரணங்களுக்காக மேலதிகாரிகளினால் அடக்கியொடுக்கப்பட்டு, சிறிய குற்றங்களுக்குக் கூட உடனடி தொழில்நீக்கம் பெறுவதென்பது அன்றாட நிகழ்வாக - ஜேர்மன் மண்ணின் இயல்பு வாழ்க்கையாக மாறிவிட்டது. அத்தகைய தொழில்நீக்கம் வழங்கப்பட்டுவிட்டால் அதற்க எதிராக தமது பக்க நியாயங்களை சட்டபூர்வமாக எடுத்துச் சொல்ல வாய்ப்பிருப்பதில்லை. அதன்பின்னர் வருகின்ற அடுக்கடுக்கான சமூகப்பிரச்சினைகள் எண்ணில் அடங்கா.

Mr. Ghandrizchi Mahmud என்பவர் பத்து வருடங்களுக்கு மேலாக தொழில்புரிந்து தொழிற்சாலை நிர்வாகத்தினரால் தொழில்நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் நீதி மன்றத்தில் நிர்வாகத்திற்கு எதிராக ஏற்கெனவே வழக்குத் தொடர்ந்த அனுபவம் மிக்கவர். இவருடைய உதவியுடன் ஐந்து பேர் கொண்ட குழுவினரால், NGG என்ற ஜேர்மனியின் மிகப்பெரிய தொழிலாளர் யூனியனின் உதவி நாடப்பெற்றது. NGG தொழிற்சங்க அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையின் பின் அவர்கள் ஆதரவுடன் பூர்வாங்க வேலைகள் எம்மால் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த ஆண்டு தொழிலாளர் தினமான மே 1 எங்களுடைய நடவடிக்கைகளை வெளிக்கொணர எண்ணி இருந்தும் நீண்ட சட்டச் சிக்கல்கள் காரணமாக எமது நடவடிக்கையை தாமதிக்க வேண்டி நேர்ந்தது. எமது ஆரம்பகால முயற்சிகள் வெளியே தெரிய வருமிடத்து, தொழிற்சங்கம் அமைக்க முன்வந்த எம்மவர்கள் அனைவரும் நிர்வாகத்தால் வேறு காரணங்களைச் சோடித்து தொழில்நீக்கம் செய்யப்படலாம். அதனால் தாமதமாக இறுதியில் 18.05.2004 அன்று அலுவலக அறிவிப்புப் பலகையில் எமது திட்டம் அறிவிக்கப்பட்டது. எம்மைத் தொழில்நீக்கம் செய்வதென்பது சட்டத்தால் தடுக்கப்பட்டு உள்ளது என்பதையும் அதுவரை யாவும் இரகசியமாக வைக்கப்பட வேண்டுமெனவும் யூனியனால் எச்சரிக்கப்பட்டோம். அன்றையதினம் வரை யாவும் வெற்றியாக அமைந்தது.

அறிவிப்பு வெளியானதும் பல தொழிலாளர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். பல தொழிலாளர்கள் இன்னும் சில நாட்களில் நாங்கள் வேலைநீக்கம் செய்யப்படலாம் என்றும் பேசிக்கொண்டார்கள். நிர்வாக உத்தியோகத்தர்களினதும், முகாமையாளரினதும் வெறுப்பும் முதலாளியின் எரிச்சலும் பல்வேறு அச்சுறுத்தல்களும் அதிக

அடக்குமுறைகள் வழமைக்கு மாறான வேலைப்பளு என்ற வடிவத்தில் எம்மை ஆட்டிப்படைத்தது.

**நாமும் NGG யூனியனும் எதிர்பார்த்தபடி தொழிற்** சங்கம் அமைக்கும் எமது அறிவித்தலையடுத்து தொழில் அதிபர் வட்டத்திலிருந்து சமரச முயற்சிகளுக்கான ஏற்பாடுகள் நடந்தன. நாம் மூவரும் நடவடிக்கைகளைக் கைவிடுமிடத்து, தொழிலாளர்களுக்கு அதிக கொடுப்பனவு வழங்குவதாகவும், பிரச்சினைக்குரிய முகாமையாளர் நிர்வாக உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகவும் எமக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

**எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்கிவிடும்** ஆரம்பமுயற்சிகளான இவை யாவும் எம்மால் மறுக்கப்பட்ட நிலையில் தொழிலதிபர் Dr. Giovanelli யின் மகன் (வருங்கால முதலாளி) எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டார். பல ஆசைவார்த்தைகள் எம்மீது அள்ளி வீசப்பட்டன. எம்மூவரில் யாராவது ஒருவரைத் தன்வசப்படுத்த அவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார். இறுதிவரை உறுதியுடன் என்ன தடைகள் வரினும் போராடுவதென்று ஆரம்பத்திலேயே நாம் எமக்குள்ளே உறுதிமொழியை எடுத்திருந்ததால் எமது ஒற்றுமையையும் உறுதியையும் குட்டித் தொழிலதிபரின் சலுகை வழங்கல்கள் அசைக்கவில்லை.

**இவரது முயற்சிகள் யாவும் தோல்வி கண்ட நிலை**யில் தொழிலதிபர், நடைமுறைச் சட்டத்தைப்பற்றிச் சிந்திக்காது, சட்டஆலோசனை எதனையும் பெறாது, எமது முயற்சியின் ஆழத்தைப் புரிந்துகொள்ளாது, எம்மூவரில் ஒருவரை தொழில்நீக்கம் செய்வதன் மூலம் எமது போராட்டத்தைத் தகர்க்கத் தீர்மானித்தார். அவரத அவசர நடவடிக்கையின் பயனாக எமது உறுப்பினரில் ஒருவரான Mr. Amrudin Kreho தொழில் நீக்கம் செய்யப்பட்டார். இதற்காகக் காத்திருந்த NGG யூனியன் உடனடியாகச் செயலில் இறங்கியது. பத்திரிகையாளர் மாநாடு, வானொலியின் பார்வை என்று ஊடகங்கள் யாவும் தம் பார்வையை எம்மீது திருப்ப வழிசெய்தது. B.W.செய்தி நிறுவனம் மணிக்கொரு தடவை எம்மைப் பற்றியும், எமது நடவடிக்கைகளில் முன்னேற்றம் பற்றியும் மக்கள் மத்தியில் தகவல்களைச் சுடச்சுட எடுத்துச் சென்றன. பொது அமைப்புக்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் எம்முடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டனர். **அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பதை அறிந்து** கொள்ளும் ஆர்வம் எல்லோரிடமும் காணப்பட்டது.

இந்த நிலைமையில் மற்றொரு திடீர் மாற்றம் நிகழ்ந்தது. தொழிலகத்தில் இயல்புநிலையைக் குழப்பி, சட்டத்திற்கு மாறாகத் தொழிற்சங்கம் அமைக்கும் நடவ bf i f f s p ;<Lgl I j hf nj hp j gu Dr. Giovanelli, Nataschu Holm, Martin Jeyaraj, Amurudin Kreho, Arben Mullaj, Armin Mustafa ஆகிய ஐந்து ஊழியர்**கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.** ஏற்கெனவே Dr. Giovanelliக்கு நன்கு அறிமுகமான தலைமை நீதியரசர் இவ்வழக்கை எடுத்து நடத்துவதாக அறியமுடிந்தது. இந்த நீதியரசர், தனது பதவிக்காலத்தில் நீதிமன்றிற்கு வந்த தொழிலாளர்களுக்கு எதிரான வழக்குகளில் பாதகமான தீர்ப்புகளை வழங்கி ஏற்கெனவே பல தொழிலாளர்களை தொழில்நீக்கம் செய்ததை நியாயப்படுத்தியவர். இன்றும் அதே எதிர்பார்ப்பு நீதிமன்றப் பார்வையாளரிடையே காணப்பட்டது. பத்திரிகையாளர் ஆர்வத்துடன் நீதிமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பிரசன்னமாகி இருந்தனர். படிப்படியாக எமது பக்க நியாயங்கள் நிதிமன்றத்துக்குள் வலுப்பெற ஆரம்பித்தது.

**இடைவேளையின் பின்னர் முதலாளி தன்பக்க** நியாயங்களை முன்வைத்தார். தீர்ப்பு எதிர்பார்த்தபடி எமக்குச் சாதகமாகவே அமைந்தது. பணி நீக்கம் பெற்றவர்கள் அனைவரும் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட வேண்டும் எனவும், தொழிற்சங்க அமைப்பு வேலைகளை எக்காரணம் கொண்டும் தடை செய்யமுடியாது என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. அம்முயற்சிகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இடையூறு விளைவிக்குமிடத்து தொழிலலதிபர் ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்குச் சிறை செல்ல நேரிடும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

ஊடகங்கள் எமது வெற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிட்டன. மிகப்பெரிய தொழில் அதிபர் நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட நடவடிக்கை முக்கிய இடத்தை அவற்றில் இடம்பெற்றிருந்தன. தொழில் அதிபர் தனக்குச் சாதகமாக நீதிமன்றில்

**தொழிலாளர் சார்பாக தேர்தலில் நின்றவர்கள்**


Raza Möbius
McDrive


Amrudin Kreho
Hauptbahnhof



Larissa Blum
Hauptbahnhof


Amin Mustafa
Hauptbahnhof


Helga Häntschel
McDrive


Arben Mullaj
Hauptbahnhof


Ehab Osman
McDrive


Albert Lamaj
Hauptbahnhof


Martin Jeyaraj
Hauptbahnhof


Irene Morina
Hauptbahnhof


Natascha Holm
Hauptbahnhof

தமிழகத்தில் சிறப்பு முகாம்கள் என்ற போர்வையில்
இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும்
சிறைக்கூடங்களில் உள்ளவர்கள் நினைவாக....

# சிறப்புமுகாம்

சா வேலு

இருட்டின் துரத்தலிலும்
வெளிச்சத்தின் மிரட்சியிலும்
மொழியின் பயங்கரம்

சப்தங்களை எதிரொலிக்காத
மதில் சுவர்கள்
வடுக்களின் மீதான கீறல்

இதழோர புன்னகையின் மிரட்டல்களில்
நசுங்கிப்போனது
நம்பிக்கைகளின் குரல்கள்

கனவுகளும்
கதையாடல்களும்
நாற்காலிகளுக்கு.....
எமது இருத்தலின் மீதே

கருகிப்போன கனவுகளும்
விலகிப்போக......
நகரும் நம்பகமற்ற நாட்கள்

மறு
பதிப்போ..... வாசிப்போ
அகராதியில் குறிப்பெழுதி வையுங்கள்
சுவாசிப்புகளின் சப்தங்கள் பதிவாகாத
சூன்யத்திற்கு.....


# Books Abroad

தேசம் சஞ்சிகை வெளியிட்ட 'றைஸிங் புரம் தி ஆஸஸ்' என்ற யாழ்நூலக எரிப்பும் அதன் பின்னான வளர்ச்சியும் பற்றிய என் செல்வராஜாவின் தொகுப்பு பல வழிகளிலும் யாழ்நூலகத்தின் வளர்ச்சிக்கு உதவிவருகின்றது.

Books Abroad என்ற அமைப்பினருக்கும் இந்நூல் அனுப்பி வைக்கப்பட்டு தேசம் சஞ்சிகை சார்பில் என் செல்வராஜா தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இதன்மூலம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் பாவனைக்கென 143 பெட்டிகளில் 7,000க்கும் அதிகமான நூல்கள் அனுப்பிவைக் கப்பட்டு அவை யாழ் பொது நூலகத்தைச் சென்றடைந்துள்ளதை பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் உறுதிப்படுத்தி உள்ளார்.

நூல்களை வகைப்படுத்தி பகுப்பதற்கான பெறுமதி வாய்ந்த நூல்களை கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்திடம் இருந்து தேசம் சஞ்சிகை பெற்று யாழ் நூலகத்திற்கு அனுப்பி வைத்தமை தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் தமது துறைசார் கல்வியை மேற்கொண்டுவரும், நூலகவியல் தகவல் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் தனியானதொரு பிரிவு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் உருவாக்கப்பட்டு அபர்டீன் பல்கலைக்கழகத்தில் இருந்து நூல்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அந்நூலகப் பிரிவின் நூல்தொகையை அதிகரிக்க Books Abroad நிறுவனம் இவ்வாண்டு இறுதியில் நூலகவியல், ஊடகவியல் சார்ந்த நூல்களை வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றது.❑



நிறுத்திய சார்புநிலைத் தொழிளாளர்களின் கூற்றுக்க ளைத் தோற்கடித்து 19.08.2004 அன்று 75.7வீத வாக்க ளிப்பினைப் பெற்று நாம் வெற்றிகொண்டோம்.

புலம்பெயர்ந்த மண்ணில் தொழில்பேட்டைகளில் எம்மவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு எமது ஒட்டுமொத்த சக்திகளையும் பாரிய தொழிலகங்கள் நீதி நியாயமற்ற முறையில் உறிஞ்சி எடுக்கும் முறைமையை கேள்விக் குள்ளாக்கிய இத்தீர்ப்பு, ஐரோப்பாவின் தொழில் நீதி மன்றங்களின் அடக்கி வைக்கப்பட்டிருந்ததொரு வெள்ள அணைக்கதவைத் திறந்த விட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தீர்ப்பின் அடிப்படையில் தொழிலாளர்களின் வழக்குக ளில் சாதகமான திர்ப்புக்களை எதிர்பார்க்கலாம்.❑

என். செல்வராஜா
நூலகவியலாளர்



# ஈழத்தின் வடபுலப்பெயர்வும் அது தொடர்பான இலக்கியங்களும்

இராணுவ நடவடிக்கைக்கு முகம்கொடுக்க இயலாமல் 1995 ஒக்டோபர் 30ல் யாழ்குடா மக்கள் பாரிய இடப் பெயர்வொன்றை மேற்கொண்டார்கள். இது ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இப்பெயர்வின் போது மக்களின் சொத்துக்களுடன் படைப்பாளிகள் பலரின் படைப்புகளும் சேகரித்துக் காத்த நூல்களும் இழந்து போயின. யாழ் பல்கலைக்கழகத்தின் பல ஆயிரம் ஆவணங்கள் இவ்விடப்பெயர்வின் பயனாகக் கவனிப்பாரற்று கறையான்களின் பசிக்கு இரையான செய்தி மனதை வருத்துவதாகவுள்ளது. கிராமம் தோறும் கட்டிகாத்த சனசமூக நூலகங்களில் பாதுகாத்து வைக் கப்பட்ட நூல்களின் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த வரலாற்று அவல நிகழ்வையும் அதற்கு முன்ன ரும் பின்னருமான வேறும் பல தமிழரின் முடிவில்லாத இடப்பெயர்வுகளையும் ஈழத்து இலக்கியங்களாக நம்ம வர்கள் பதிவு செய்துள்ளார்கள். போரின் விளைவாக ஏற்பட்ட இந்த உள்ளக இடப்பெயர்வுகளினைச் சித்திரிக் கும் ஈழத்து இலக்கியங்கள் சிலவற்றைப் பற்றிய குறிப்புரையாக இக்கட்டுரை அமைகின்றது.



**வசந்தராஜாவின் Tamil Exodus and Beyond, 1995 இன் இடப்பெயர்வு பற்றிய முதல் நூலாக வந்தது. இந்நூல் இலங் கையின் தேசியப் போராட்டம் குறித்த பகுப்பாய்வுக் கண் ணோட்டமாக அமைந்திருந்தது. ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்தின் உயரதிகாரியாக இருந்த வேளையில் சேகரித்த பல தகவல்களின் அடிப்படையில் இவர் இந்நூலைத் தயாரித்திருந்தார். இந்நூல் பின்னர் 1996இல் "தமிழர் வடபுலப் பெயர்ச்சி: அவலமும் அதற்கு அப்பாலும்." என்ற பெயரில் எஸ்.சங்கரமூர்த்தியால் தமிழாக்கம் செய்யப்பட்டது.**

"யாழ்ப்பாண இடப்பெயர்வு" என்ற மற்றுமொரு ஆய்வு நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறையைச் சார்ந்த கார்த்திகேசு குகபாலனால் எழுதப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குடித்தொகைக் கல்வி யில் சிறப்புப்பட்டம் பெற்றவர் கலாநிதி குகபாலன். முதுகலைமானி, கலாநிதி, முதுகலைமானி டிப்ளோமா பட்டக்கல்வி ஆகியவற்றில் குடித்தொகைக் கல்வியை, குறிப்பாக இடப்பெயர்வு சம்பந்தமான ஆய்வினையே தொடர்ந்தும் மேற்கொண்டவர் என்றவகையில் கலாநிதி குகபாலனின் இந்நூல் ஆழமான ஆய்வுநூலாக கருதப் படுகின்றது. இடப்பெயர்வினால் மக்கள் அனுபவித்த, அனுபவித்துவரும் சமூக, பொருளாதார கலாச்சாரப் பிரச் சினைகளைப் பற்றி இதில் விரிவாக அலசப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள்" என்றொரு நூல் 1997ல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையால் எழுதப்பெற்றது. 1995 இடப்பெயர்வின் போது யாழ்ப்பா ணத்திலேயே தங்கி விட்டவகையில் அங்கு எஞ்சியிருந்த 2000 பேரில் அராலியூர் சுந்தரம்பிள்ளையும் அவரது மனைவியும் அடங்குவர். அவர்களது அந்த ஆறுமாத வெளி உலகத் தொடர்பற்ற வாழ்க்கை அனுபவம் இங்கு பதிவாகியிருக்கின்றது.

"யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" என்ற கவிதை நூல் முதுபெரும் எழுத்தாளர் வரதரால் யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடாக, ஜூன் 1997இல் வெளிவந்திருந்தது. இந்நூல் உருவில் சிறிதாயிருந்த போதிலும், காட்டமானதொரு புதுக்கவிதை நூலாக அமைந்துள்ளது.

செங்கை ஆழியான் இந்நூலுக்கு எழுதியுள்ள முன் உரையின் ஒரு பகுதி கீழே. "அந்தச் சோக நாடகத்தின் சமூகப் பயன் ஈழத்து வரலாற்றில் ஒரு கறை. கட்டியெ ழுப்பிய சுதந்திர மாளிகையின் தாங்குநிலையை ஐயுற வைத்துள்ள பூகம்ப அலை ஆயிற்று. அந்த சோகநாடகம் ஆரம்ப கட்டத்திற்கே திரும்பவும் மீண்டு விட்டது. இந்த நாடகத்தில் நடித்த இலட்சோபலட்சம் மக்களில் பலர் காணாமல் போய்விட்டார்கள். இழந்துவிட்ட சொர்க்கத் திற்கு மீண்டுவந்த உணர்வு செத்துப் பல காலமாகின்றது. எல்லாமிருந்தும் எதுவுமேயில்லாத உணர்வு. இந்த நாடகத்தின் ஒவ்வொரு அசைவிலும் மனுக்குலம் அகௌர வப்படுகின்றது. இடிபடுகின்றது. மனுக்குலத்தின் இருதயம் குத்தப்பட்டுக் குருதி வடிகின்றது. ஓடியபோது இருந்த பயமும் பரிதவிப்பும் திரும்பி வந்தபோது பயமும் அவமா னமுமாக மாறிவிட்டன. வீடுகளுக்குள் முடங்கிக்கொள்வ தன் மூலம் வீதிகளில் சந்திக்கின்ற அவமதிப்புக்களையும் மனக்காயங்களையும் குறைத்துக் கொள்ளும் தந்திரோ பாயத்திற்கு குடாநாட்டு மக்கள் வந்து விட்டனர்".

தமிழரின் பாரிய புலப்பெயர்வின் அவலத்தைப் பதிவு செய்துள்ள சிறுகதைகள் ஏராளம் வெளிவந்திருக்கின்ற போதிலும் சிலவே தனித் தொகுப்புக்களாக்கப்பட்டுள்ளன. வேறும் பல சிறுகதைகள் அவற்றின் ஆசிரியர்களின் சிறுகதைத் தொகுதிகளுக்குள் இரண்டறக்கலந்து தனித் துவமான அடையாளத்தைப் பெறத் தவறிவிட்டன.

இவற்றில் சில கதைகள் இடப்பெயர்வில் பங்கேற்காது புகலிடத்தில் இருந்தவண்ணம் கற்பனையில் ஊற்றெடுத்து எழுதப்பட்ட புனைகதைகளாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. இவற்றைத் தவிர்த்து உண்மைநிலையினை உணர்ந்து அனுபவித்த எழுத்தாளர்களின் புலப்பெயர்வு அவலங்களை கதைக்களமாகக் கொண்டு வெளிவந்த சிறுகதைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

"யாழ்ப்பாணம்" என்ற தலைப்பில் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை 1999இல் மற்றொரு நூலை சிறுகதைத்தொகுப் பாக வெளியிட்டிருந்தார். ஈழத்து சிறுகதை வரலாற்றில் சமகாலச் சூழலைப் பிரதிபலித்து இலக்கியம் படைத்தவர் களில் ந.சுந்தரம்பிள்ளை முக்கியமானவர். இவர் 60 கதைகள் வரையில் எழுதியிருந்தும், நூலுருவில் வெளிவந்த சிறுகதைத்தொகுதி "யாழ்ப்பாணம்" ஆகும். சமகால நிகழ்வுகளைப் பகைப்புலமாகக் கொண்ட 10 கதைகள் இதில் உள்ளன. வன்னி, மலையகம், யாழ்ப் பாணம், கொழும்பு என்று இவரது கதைத்தளங்கள் விரிகின்றன. இதிலுள்ள யாழ்ப்பாணம் என்ற கதை 1995 இடப்பெயர்வுக்குப் பிந்திய யாழ்ப்பாணச் சூழலை மிக அழுத்தமாகப் பதிவுசெய்கிறது. அக்காலகட்டத்தில் அவரது வாழ்ந்துபட்ட அனுபவங்கள் இக்கதையில் தரிசனத்திற்குள்ளாகின்றது.

"அழுவதற்கு நேரமில்லை" என்று மற்றொரு சிறுகதைத் தொகுதி 2002ல் வெளிவந்துள்ளது. தாமரைச் செல்வி என்ற ஈழத்தின் குறிப்பிடத்தக்கவொரு வன்னி எழுத்தாளர் எழுதிய சிறுகதைகள் இவை. தாமரைச்செல் வியின் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பு இதுவாகும். "அழுவதற்கு நேரமில்லை" கதைத்தொகுதியில் அடங்கி யுள்ள ஒரு சிறுகதை தவிர மற்றைய 11 கதைகளும் இடப்பெயர்வின் பின்வந்த நாட்களில் எழுதப்பட்டவை என்பதால் அதன் கதைக் களங்கள் அந்த நிகழ்வின் அவலங்களைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளது.

நாவல்களைப் பொறுத்தவரை இலங்கையின் பிரபல படைப்பிலக்கியவாதியான செங்கை ஆழியான் அவர்கள் எழுதிய "போரே நீ போ" என்ற நாவல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் தாயகத்தின் சமகாலப் பிரச்சினைகளை ஒரு பாமரக் குடிமகனின் பார்வையில் கூறும் நாவலாகும். இடம்பெயர்ந்த மக்களையும், இடம்பெயராத மக்களையும் இணைத்த ஒரு நூலாக - நாவலாக இது அமைகின்றது. மானிடவாழ்வின் பெறுமதி வாய்ந்த உயிர்களையும் இளமைக் கனவுகளையும் போரும், அதன் வெளிப்பாடாய மைந்த புலப்பெயர்வும் எவ்வளவுதூரம் நாசப்படுத்தி வருகின்றதென்ற அவலநிலைகளை "போரே நீ போ" சித்திரிக்கின்றது.

1995இன் இடப்பெயரவு பற்றிய இலக்கியங்கள் ஈழத்து இலக்கியப்பரப்பில், குறிப்பாக ஈழ விடுதலைப் போராட்ட இலக்கியங்களுக்குள் தனித்துவமானதொரு இடத்தினை வகிக்கும் என்பது நிச்சயம். தாயகத்தின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளும் பதிவுக்கு உள்ளாக்கப்படுவது மிக அவசியம்.❑

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

**Immigration & Nationality**
**Employment**
**Land Lord & Tenant**
**Housing**
**Welfare Benefits**
**Matrimonial**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

ஆழிப்பேரலை ஏற்படுத்திய அநர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களில் அம்பாறை வாசியான அப்துல் காதரும் ஒருவர். எதிர்பாராமல், சடுதியாக எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் பெருகி வந்த கடல் பத்து நிமிட நேரத்தில் அவனது உலக வாழ்க்கையை நிர்மூலமாக நொறுக்கியது.

பயங்கரமான அந்தப் பத்து நிமிடநேரப் பிரளயத்தில் அவன் தன் இளம் மனைவியை இழந்தான். இரு சிறிய பிள்ளைகளை இழந்தான். வாழ்நாளெல்லாம் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த உடமைகளையெல்லாம் இழந்தான். அவனது உள்ளமும் உடைந்து சிதறியது.

அபூர்வமாக உயிர்பிழைத்து பிரமைபிடித்த நிலையில் அலைந்து கொண்டிருந்த அப்துல் காதரை, சமூகத் தொண்டர் ஒருவர் கண்டு, அழைத்துக் கொண்டுபோய் சமீபத்திலிருந்த அகதி முகாமில் சேர்த்திருந்தார்.

இரவோ பகலோ, நாளோ கிழமையோ எதுவும் தெரியாமல், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற உணர்வே இல்லாமல் வெறும் கற்சிலைபோல் உயிரற்ற பொம்மைபோல் இருந்தான் அப்துல்.

உணவில் நாட்டமில்லை. சாப்பாடு கொடுத்தால் உண்பான். கொடுக்காவிட்டால் பட்டினி கிடப்பான். அதைப் பற்றிக் கவலைப்படமாட்டான். இரவில் தூக்கம் வராமல் வெகுநேரம் விழித்திருப்பான். தன்னைப் பற்றி எந்தக் கவனமும் எடுக்காமல் தாடியும் மீசையும் பரட்டை தலையும் புளுதி படிந்த உடையுமாய் இருந்தான்.

இருவாரங்கள் உணர்ச்சி ஏதும் காட்டாமல் கற்சிலையாக இருந்த அவனது குணத்தில் திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஒருநாள் இரவு திடீரென்று விழித்து எழுந்து இரு கைகளாலும் காதுகளைப் பொத்தியபடி கூச்சலிட்டான். ஆழ்கடலிலிருந்த பேரலை எழுந்துவந்து அவனது மனைவியையும் குழந்தைகளையும் அடித்துச் செல்லும் காட்சி கண்முன்னே நடைபெற்றுக் கொண்டிருந்தது. (Intrusive Memory)

அவனது மனைவி பார்த்திமா உயிருக்காகப் போராடிய காட்சியும் பிள்ளைகள் போட்ட கூச்சலும், அவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஆழிப் பேரலையின் ஊழித் தாண்டவமும் அவனது மனத்திரையில் திரும்பத் திரும்பக் காட்சியளித்தன. (Flashback)

அவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. எல்லோரிடமும் எரிந்து விழுந்தான். மனப்பதட்டம் மனத்தவிப்பு, அங்கலாய்ப்பு, இனந்தெரியாத ஒரு பயம் ஆகிய குணங்கள் அவனுள் குடிகொண்டன. இரவில் பயங்கரமான கனவுகளால் நித்திரை இழந்தான். மாறாத மனச்சோகம் அவனைப் பீடித்து உலகம், வாழ்க்கை, சுற்றம், சூழல் யாவுமே போலியாகவும், உயிர் வாழ்வதில் அர்த்தம் ஏதுமில்லை என்றும் தோன்றியது.

ஆழிப்பேரலை ஏற்படுத்திய அநர்த்தத்தினால் அப்துல் காதருக்குப் பாரிய மன அழுத்தம் உண்டாகி இருக்கின்றது. அவனுக்கு மட்டுமல்ல பாதிக்கப்பட்ட பலர் இந்நிலைக்கு உள்ளாகி உள்ளனர்.

# உள்ளத்தை சிதறடித்த பேரலை



கலாநிதி
எஸ் தியாகராஜா

## (Post Traumatic Stress Disorder - PTSD) அதிர்ச்சியைத் தொடர்ந்து வரும் மன அழுத்தம் :

இயற்கையாக ஏற்படும் நில நடுக்கம், வெள்ள அழிவு, கடல்பெருக்கு போன்ற அழிவுகளையும், மனிதனால் ஏற்படுத்தப்படும் போர், தீயெரிப்பு, இன அழிப்பு, பாலியல் பலாத்காரம் போன்ற அநர்த்தங்களையும் தொடர்ந்து மனிதர்களுக்கு ஏற்படும் கடுமையான, தொடர்ந்த, சில சமயம் காலம் கடந்து ஏற்படும் உள்ளச் சீரழிவு: அதிர்ச்சியைத் தொடர்ந்த மன அழுத்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

இந்த மன அழுத்த நோயின் அறிகுறிகள், ஹிட்லரின் நாசிச் சிறைகளில் அடைக்கப்பட்டு இன அழிப்புக்குத் தப்பிவந்த யூதர்களிடம் இனம் காணப்பட்ட போதிலும் வியட்நாம் யுத்தத்தில் சேவை புரிந்த அமெரிக்கப் போர் வீரர்களிடம் இந்நோயின் உளவியல் அறிகுறிகள் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டன. (Psychological symptoms) வியட்நாம் யுத்தத்தில் பணியாற்றிய 90% வீரர்களிடையே இந்த மனநோய் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (Fullerton, C.S."Post Traumatic stress Disorder", American Psychiatric Press, Washington D.C., 1997).

## நோய்க்கான காரணிகள் :

### 1. அசாதாரண அநர்த்த அனுபவம்

இம்மனநோய் ஏற்படுவதற்கான காரணம், இந்த நோயாளிக்கு ஏற்பட்ட அசாதாரணமான அன்றாட வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஓர் அநர்த்தத்தைப் பார்த்த அல்லது அதில் பங்கெடுத்துக்கொண்ட அனுபவமேயாகும். 1989ம் ஆண்டில் எரிமலை வெடிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களிடையே நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் இந்த அநர்த்

தத்தை அதிக நேரம் பார்த்த மக்களிடையே இந்நோயின் அறிகுறிகள் அதிகம் காணப்பட்டன.

இத்தகைய அநர்த்தங்களுக்கு உள்ளான எல்லோருக்குமே மனத்தாக்கம் ஏற்படுவதில்லை. ஆதலால் தனிப்பட்ட குணாதிசயங்களும் மனநிலைகளும் முன்மனச்சார்புகளும் (Pre Disposition) இம் மனநோய் ஏற்பட ஏதுவாகின்றன.

### 2. முன்மன நோய்கள்

ஏற்கெனவே மனப்பதட்டம் (Anxiety), அங்கலாய்ப்பு (Agitation). மனத்தவிப்பு (Tension). மனச்சோகம் (Depression), ஆகிய மனநோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிர்ச்சியைத் தொடர்ந்த மன அழுத்த நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகம்.

### 3. தனிமனித குணாதிசயங்கள்

அதிர்ச்சியைத் தொடர்ந்த மன அழுத்த நோய் ஏற்படுவதற்குத் தனிமனித குணாதிசயங்களும் பங்களிக்கின்றன. உறுதியான மனவலிமை கொண்டவர்களை இந்நோய் பாதிப்பது அரிது. இந்நோய் ஏற்பட மரபுவழிக் காரணங்கள். அதிர்ச்சி காரணமான முன் அனுபவங்கள், இளமையில் பெற்றோரைப் பிரிந்தமை, வன்முறை அனுபவங்கள் ஆகியன குறப்பிடத்தக்க பங்களிப்பவை. ஆண்களை விட பெண்களே இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுவர்.

### அறிகுறிகள். (Symptoms) :

அதிர்ச்சியைத் தொடர்ந்து வரும் மனஅழுத்த நோயின் அறிகுறிகள் பலவகைப்படும். எல்லா அறிகுறிகளும் எல்லா நோயாளர்களிடமும் இருக்கும் என்றில்லை. சிலரிடம் சில அறிகுறிகள் மேலோங்கியிருக்கும்.

### 1. மனப்பதட்டம் (Anxiety)

இந்நோயாளர்களுக்கு மனப்பதட்டம், அங்கலாய்ப்பு, அமைதியின்மை, ஆகியன தொடர்ந்துகொண்டேயிருக்கும். இதன் காரணமாக மூச்சுத் திணறல். நெஞ்சிறுக்கம். தலைவலி, இதயத் தடிப்பின் அதிகரிப்பு, வயிற்றுக்கோளாறுகள் ஏற்படலாம்.

### 2. கோபக் குணம்

எந்தவித காரணமும் இன்றி மற்றையோர் மேல் எரிந்து விழுவார்கள். எதற்கெடுத்தாலும் எரிச்சலும் கோபமும் வரும்.

### 3. நித்திரையின்மை

இவர்கள் இரவில் நித்திரையின்றி அவஸ்தைப்படுவார்கள். நித்திரைக்குப் போக நெடுநேரம்பிடித்தல் (Early Insomnia), அடிக்கடி கண்விழித்தல் (Intormittent Wakeing), அதிகாலையில் எழுந்திருந்து (early Morning Waking), பின்னர் நித்திரை வராது அவதிப்படல் ஆகிய குணங்கள் இடம்பெறலாம்.

### 4. வலுவாகத் தலையிடும் பிரதிமை (Intrusive Imagery)

அதிர்ச்சியைக் கொடுத்த சம்பவங்கள் அடிக்கடி இரவிலும் பகலிலும் மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்கும். பயங்கர நிகழ்வுகளின் கோரக்காட்சிகள் (Flash Back) அடிக்கடி தோற்றமளிக்கும். நினைத்த மாத்திரத்தில் அப் பிரதிமைகளைத் தடுக்க முடியாது.

**S . SATHA & Co**

**SOLICITORS**

*IMMIGRATION - CONVEYANCING - INJUNCTIONS*
*CRIMINAL - DIVORCE - LEGAL AID WORK*

Community Legal Service
Specialist Help Point
Immigration
Crime

Criminal Defence Service

ILPA

376 - 378 High Street North,
Manor Park, London E12 6PH

**Tel : 020 8471 9484 Fax : 020 8471 9485**

### 5. அறுந்த நினைவுகள்

இவர்களால் நினைத்த மாத்திரத்தில் அதிர்வைக் கொடுத்த நிகழ்ச்சிகளையோ சம்பவங்களையோ நினைவு படுத்த முடியாமலிருக்கும். அப்படி நினைவுபடுத்தினாலும், அவை தொடர்பாக இல்லாது அறுந்தறுந்து பிரதிமைகளாகத் தோற்றம் தரும்.

### 6. பயங்கரக் கனவுகள்.

அதிர்ச்சி தரும் பயங்கரக் கனவுகள் (Nightmares) இரவில் அடிக்கடி ஏற்படலாம். இவையும் நித்திரைக் குழப்பத்திற்கான காரணமாகும்.

### 7. தவிர்க்கும் நடத்தைகள் (Avoidance behaviour)

அவர்கள் சந்தித்த பயங்கர நிகழ்வுகளை ஞாபகப்படுத்தும் பொருட்களை சின்னங்களை சம்பாஷனைகளைத் தவிர்ப்பார்கள். அச்சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் செல்ல மறுப்பார்கள்.

### 8. மழுங்கிய உணர்வுகள்

இம்மனநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், உணர்வுகள் மழுங்கி எந்தவிதமான உணர்ச்சிகளையும் காட்டாமல் இருப்பார்கள். (emotional blunting). மற்றையோரின் கூட்டை நாடாது, பழகாது, தனிமையை நாடுவார்கள்.

### 9. விருப்பு வெறுப்பின்மை

இவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய விஷயங்களில் எதவித அக்கறையோ, சிரத்தையோ இல்லாமல் விலகியிருப்பார்கள். (detachment). விருப்பு வெறுப்பு ஏதும் காட்டமாட்டார்கள். இன்பம் தரும் வேலைகளில் ஈடுபடமாட்டார்கள்.

### 10. மனச்சோகம்

இந்நோய் பிடித்திருப்பவர்களில் ஒரு பகுதியினர், ஆழ்ந்த மனச்சோகத்தினால் அவதிப்படுவார்கள். மனச்சோகம் தனிப்பட்ட மனோவியாதியாகவும் இடம்பெறும். இந்நோய் பற்றிய விபரங்களைப் பின்னால் பார்ப்போம்.

### 11. குற்ற உணர்வு

பேரழிவுகளில் தனது உற்றார் உறவினர் உயிரிழந்தமைக்கு தானே காரணம் என எண்ணி அதீத குற்ற உணர்வினால் (Guilty feelings) வருந்துவார்கள்.

### 12. தற்கொலை முயற்சி.

அதிர்ச்சியைத் தொடர்ந்து வரும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒருசிலர் தீராத மனச்சோகத்திற்கு ஆளாகி உலகம், வாழ்க்கை, இன்பம், சுகம் எல்லாமே போலியென எண்ணித் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவார்கள்.

## உளவியல் தாக்கங்கள் (Psychological effects) :

பொதுவாக அதிர்ச்சிகளினால் ஏற்பட்ட மன அழுத்த நோய் கொண்டிருப்பவர்களால், நடைபெற்ற அநர்த்தங்களை முழுமையாக நினைவுபடுத்த முடியாமல் இருக்கும். (Incomplete recall). ஆனாலும் ஆழ்மனத்தில் (subconcious) இந்நிகழ்வுகள் படிந்து அவர்கள் விரும்பாத நேரங்களில் அவர்களது மனக்கட்டுப்பாட்டை மீறி இவற்றின் பிம்பங்கள் மனத்திரையில் இடம்பெறும்.

## நோய் நிர்வாகம் :

### 1. அநர்த்தகால அவசரத் திட்டங்கள்

பேரழிவை ஏற்படுத்தும் அநர்த்தங்களால் உண்டாகும் உளவியல் பாதிப்புக்களைச் சீர்செய்வதற்கான அவசர காலத் திட்டங்களை அந்த நாட்டின் அரசே மேற்கொள்ள வேண்டும். இம்மக்களுக்கான நிவாரணமும் புனர்வாழ்வும் உளவியலுடன் இணையப்பட வேண்டும். உளவியல் சிகிச்சை முறைகளில் பயிற்சிபெற்ற மனநல மருத்துவர்கள், தாதிகள், தொண்டர்கள் உதவியாளர்களை உடனடியாகத் தொடர்பகொண்டு அவர்களின் உதவிகளைக் கோரி சேவையில் ஈடுபடுத்த வேண்டும். (WHO Guideline)

### 2. உடனடிச் சிகிச்சைகள்

இம்மக்களுக்கு வேண்டிய உடனடி உதவிகளாக அனுதாபமான பேச்சும் அவர்களுக்கு வேண்டிய உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலுமேயாகும்.

தீவிரமான மனப்பதட்டம் (Anxiety) டென்ஷன் உள்ளவர்களுக்கு சில நாட்களுக்கு மட்டும் பென்சோ டயசிபின் மருந்துகள் (Diazepam, Oxazepam, Lorazepam) பேருதவி செய்யும். நீண்டகாலத்திற்கு இவை ஏற்றவை அல்ல. நித்திரையின்றி அவதிப்படுவோருக்கு நித்திரை மருந்துகள் (Temazepam, Zopiclone) உதவி புரியும்.

## நீண்டகாலச் சிகிச்சைமுறைகள் :

### நோயின் மதிப்பீடு

அதிர்ச்சியைத் தொடர்ந்துவரும் மன அழுத்த நோயை கொண்டிருப்பவர்கள் முதலுதவி புரிந்த மனநலத் தொண்டர்கள் மூலமாகவோ, உள்ளூர் வைத்திய அதிகாரி மூலமாகவோ அல்லது குடும்ப வைத்தியர் மூலமாகவோ ஒரு மனநல வைத்திய ஆலோசகரைப் பார்க்க வேண்டியது அவசியம்.

நோயாளியைப் பரிசோதனை செய்யும் மருத்துவர் நோயின் அறிகுறிகள், அவற்றின் தன்மை, அவை நீடித்த காலம், நோயாளியின் குணநலம், இந்நோய் ஏற்பட முன் இருந்த மனநலம் ஆகியவற்றைக் கொண்டு நோயின் தீவிரத் தன்மையை (Severity) மதிப்பீடு செய்வார். இம்மதிப்பீட்டின்படி சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

தலையில் காயமுற்ற நோயாளிகளுக்கு நரம்பு மண்டலப் பரிசோதனை (Neurological examination) மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1. உளவியல் ஆலோசனைகள் (Psychological counselling)

### ஆதரவளிக்கும் ஆலோசனைகள் (Supportive counselling)

அதிர்ச்சியைத் தொடர்ந்துவரும் மனஅழுத்தம்

இலகுவாக மாறக்கூடிய வியாதியல்ல. ஒரு உளவியல் ஆலோசகரால் நோயாளியின் குழம்பிய உணர்ச்சிகளைச் சீராக்கும் உதவிகளைத் தரமுடியும். நடந்துபோன அதிர்ச்சியான சம்பவங்களைச் சிறிது சிறிதாக ஞாபகப்படுத்தி அவற்றின் யதார்த்தத்தை உணரவைத்து அந்நிகழ்வினால் ஏற்பட்ட வேறுபட்ட உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலே "ஆதரவளிக்கும் ஆலோசனையின் நோக்காகும்"

நோயாளியின் குற்ற உணர்வுகளுக்கு உளவியல் ரீதியான ஆலோசனையினால் தீர்வுகாண முடியும். நடந்து முடிந்த விபத்தை தன்னால் தடுத்திருக்க முடியுமென நோயாளி எண்ணுவதாலும். மற்றையோர் இறந்துபோக தான் மட்டும் தப்பியிருப்பதனால் நோயாளியின் உள்ளத்தில் குற்ற உணர்வுகள் (guilty feelings) மேலோங்கி இருக்கும். இயற்கையின் அநர்த்தங்களை அந்நோயாளியினால் தடுத்திருக்க முடியாதென்பதை யதார்த்தரீதியாக எடுத்துரைப்பதன் மூலம் இதற்கான தீர்வுகாண முடியும். வாழ்வு இறப்பு போன்ற தத்துவரீதியான சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்களுக்கும் இவ்வாலோசனைகள் உதவும்.

பாலியல் வன்முறை காரணமாக இம்மனோவியாதி ஏற்படும் பெண்களுக்கு மேலதிக மனோதத்துவ சிகிச்சைகள் வேண்டியிருக்கும்.

### 2. கிரகிப்பு ஒழுக்கமுறைச் சிகிச்சைகள். (Cognitive - behaviour Theraopy)

இம்மனஅழுத்த வியாதியினால் அவஸ்தைப்படும் நோயாளிகள் தன்னையும் சுற்றாடலையும் எதிர்காலத்தையும் யதார்த்தமற்ற ஒருதலைப்பட்சமான நோக்குடன் கிரகித்து அதன் காரணமாக அசாதாரணமான நடத்தைகளைக் கொண்டிருப்பார்கள். சிறுசிறு விசயங்களைப் பெரிதுபடுத்துவார்கள். பெரிதுபடுத்த வேண்டிய விஷயங்களை சிறிதாக்கி உதாசீனம் செய்வார்கள்

இவர்களது நடத்தைகளைச் சீராக்கி சாதாரண நிலைக்குத் திரும்பச் செய்வதே இச்சிகிச்சையின் நோக்கம்.

இச்சிகிச்சை முறையின் அம்சங்களாக,

(1) மன அழுத்தம் ஏற்பட்ட நோயாளர்கள் சாதாரணமாக எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பது பற்றி விளககம் கொடுத்தல்.

(2) விபத்து ஏற்பட்ட சூழலையும் கோர நிகழ்வின் ஞாபகங்களையும் இலகுவாக எதிர்கொள்ளக்கூடிய பயிற்சிகள் அளித்தல்.

(3) வியாதியின் அறிகுறிகளை நோயாளி தானே மதிப்பீடு செய்யும் (self assessment) முறையைக் கற்றுக்கொள்ளுதல் தினக்குறிப்பாகப் பதிவுசெய்தல்.

(4) விபத்தின் போது கண்ட விம்பங்களை (image) சிறிது சிறிதாக ஞாபகத்திற்குக் கொண்டு வருதல். துண்டாகிக் கிடக்கும் விம்பங்களை ஒன்றுசேர்த்து நிகழ்வை முழுமையாக்கல்.

(5) விபத்து நடந்த நிகழ்வுகளை உள்ளது உள்ளபடியே கிரகித்து அவற்றை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் பெறுதல். (Cognitive Restructuring)

(6) சின நிர்வாகம்: விபத்தை எதிர்கொண்ட. நேரில்கண்ட நோயாளிகளில் சிலர் அவ்விபத்துப் பற்றியும். அவற்றின் காரண காரியங்கள் பற்றியும். விபத்திற்கான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காதமை பற்றியும் கோபமாக இருப்பார்கள். காரண காரியங்களை உள்ளது உள்ளபடி யதார்த்தமாக விளக்கி அதற்குத் தீர்வுகாணல்.

### 3. தீவிர மனோதத்துவ சிகிச்சை (Psychotherapy)

சில சமயங்களில் நோயாளர்களின் உள்ளுணர்வுகள் (subconcious) இக்கோர விபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும். இவர்களுக்குத் தீவிர மனோதத்துவ சிகிச்சை (Psychodynamic Psychotheraphy) பயனளிக்கலாம்.

### 4. மருந்துச் சிகிச்சைகள்

இந்த நோய் "அதிர்ச்சியைத் தொடர்ந்து வந்த மன அழுத்தம்" என்பது நிச்சயமாக நிருபணமாகிவிட்டால் சாதாரண மன அங்கலாய்ப்புக்காக உபயோகப்படுத்தப்படும் "பென்சோடயசிபின் (Diazepam)" மருந்து வகைகளைத் தவிர்த்தல் நல்லது. இவற்றின் நீண்டகால உபயோகம் துர்ப்பழக்கத்தை (Addiction) உண்டாக்கலாம்.

மன அழுத்தத்தோடு மனச்சோகத்தின் அறிகுறிகளும் காணப்படுமானால் ஸேட்ரலின் (Sertraline), சிப்ரமில் (Cipramil, Citalopram), பரோக்ஸிரின் (Paroxetine), வென்லபக்ஸின் (Venlafaxine) ஆகிய மனச்சோகத்திற்கான மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

நித்திரையின்மை ஒரு பிரச்சினையாக இருக்கும் பட்சத்தில் ஸோப்பிசிளோன் (Zopiclone), ரெமஸிபாம் (Temazepam), மொகடொன் (Mogdon) ஆகியவற்றிலொன்றை குறுகிய காலத்திற்குப் பாவிக்கலாம்.

சில சமயங்களில் இவ்வியாதியுடன் மனச்சிதைவு (Psychosis, Schizophrenia) நோய்களின் அறிகுறிகள் காணப்படலாம் அப்படியாயின் க்ளோபுரோமஸின் (Chlorpromazine), ரிஸ்பெரிடோன் (Risperidone) அல்லது ஒலான்ஸபின் (Olanzapine) போன்ற மருந்துகள் உபயோகித்தல் வேண்டும்.

மருந்துச் சிகிச்சைகள் ஒரு உளவியல் நிபுணரின் மேற்பார்வையில் அல்லது மனநல மருத்துவத்தில் பயிற்சி பெற்ற வைத்தியரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## நோய் நிவாரண வாய்ப்பு (Prognosis) :

அதிர்ச்சியைத் தொடர்ந்து வரும் மனஅழுத்தம் ஒரு தீவிரமான மன வியாதி. இவ்வியாதியால் பாதிக்கப்படுவோரில் 50 சத விகிதமானவர்களே ஒரு வருட காலத்திற்குள் குணமடைவார்கள். ஆரம்பத்திலிருந்தே அதீதமான அறிகுறிகள் கொண்டவர்கள் குணமடைய நீண்டகாலம் பிடிக்கும். ஒரு சிலரால் முற்றாகக் குணமடைந்து முந்தைய நிலைமைக்குத் திரும்ப முடியாமலே போகலாம்.❑

சந்தாப்படிவங்களை
பூர்த்தி செய்து அனுப்பவும்.

**JR Universal Exchange**

**10 Queensway, London W2 3RX**

(Opposite of Queensway Station, Central Line)

Don't lose your earnings in paying commission by exchanging. We never charge commission. Our rate makes the different. Better deal for large amounts. Visit us today and you will realise how much you could save with our exchange rates.

**தரகு கொடுப்பதனால் உங்கள் வருமானத்தை இழக்கத் தேவையில்லை.**
**ஏனெனில் நாம் தரகு எதுவும் பெற்றுக் கொள்வதில்லை.**
**உங்கள் நாணயங்களுக்கான உரிய பெறுமானத்தை வழங்குவதில் எமது அணுகுமுறை வேறானது.**

**எந்த அளவு பணமும் கைமாற்றப்படலாம்.**
**ஒரு முறை விஜயம் செய்து எமது அணுகுமுறையை தேர்ந்து கொள்ளுங்கள்**

We open 7 days a week, from 8:30 a.m - 10:00 p.m

Tel : 020 7243 1884
Mobile : 07956 305 870 (Ravi)

**JR Universal Exchange**
Foreign Exchange & Cheque Cashing


# யார் புரட்சிவாதிகள்? திரிபுவாதிகள்?

மார்க்ஸ் சுட்டிக்காட்டியவாறு அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கும் கருவியாகும். அரசின் பிரதான பணி சுரண்டலைப் பாதுகாப்பதும் அடக்கப்பட்ட வர்க்கங்கள் சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக எழுவதைத் தடுப்பதும் ஆகும். அரசின் காவல் நாய்களான ஆயுதப் படைகளின் கரங்களில் துப்பாக்கி இல்லாவிட்டால் சுரண்டல் ஒரு கணமேனும் நீடித்திருக்க முடியாது. ஆகவே மக்கள் தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்றால் தம்மை ஒடுக்கி வைத்திருக்கும் அரசு இயந்திரத்தை ஆயுதப் பலங்கொண்டு உடைத்தெறிய வேண்டும். அதாவது அவர்கள் புரட்சியை நடத்தி அடக்குமுறையான முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் இடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை அமைக்க வேண்டும். இதனை மார்க்ஸ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றார்.

பாராளுமன்றப் பாதையின் மூலம் சமாதான மாற்றத்தால் இதனைச் செய்ய முடியாது. புரட்சியின் மூலம்தான் செய்ய முடியும். பாராளுமன்றம் என்பது மூலதனத்தின் நிர்வாணமான சர்வாதிகாரத்தை அலங்கரிக்கவும் தொழிலாளர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்கவும் அவர்களை குழப்பியடித்து முட்டாளாக்கவும் ஆயுதப் படைகள் என்ற உண்மையான அதிகார ஆசனத்திலிருந்து அவர்களை திசைதிருப்பி விடவும் பிற்போக்கு வாதிகள் கண்டுபிடித்த ஒரு கருவியாகும். இது ஆயுதப் போராட்டத்திற்குப் பதிலாக வார்த்தைப் போராட்டத்தை வைக்கும் ஒரு முயற்சியாகும். எனவே பாராளுமன்றப் பாதையை உறுதியாக நிராகரித்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரேயொரு விமோசனப்பாதையாக புரட்சிப் பாதையை மேற்கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்துக்களை மேற்கொள்பவர்கள் புரட்சிவாதிகள். இவற்றை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது எதிர்ப்பவர்கள் திரிபுவாதிகள் அல்லது சீர்திருத்தவாதிகள். புரட்சிவாதிகளுக்கும் திரிபுவாதிகளுக்கும் இடையில் உள்ள அடிப்படை வித்தியாசம் இதுவாகும்.❑


**கலாநிதி எஸ் தியாகராஜாவின்**

**ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள்**

**வரலாற்று நூல்**

**விரைவில் வெளியிடப்படவுள்ளது.**

**தொடர்பு : 020 8279 0354**

**சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் வாரம் இருமுறை வெளிவரும் ஜூனியர் விகடன் என்னும் பார்ப்பனியக் கிசு கிசுப் பத்திரிகையில் மதன் என்னும் ஒரு பார்ப்பனர் மனிதனுக்குள்ளே மிருகம் என்னும் தலைப்பில் புரட்சியின் நாயகன் தோழர் ஸ்டாலின் குறித்து பல்வேறு அவதூறுகளை எழுதியிருந்தார். தற்போது இலங்கையில் தினமுரசுப் பத்திரிகையில் உலகம் வியக்கும் தலைவர்கள் என்னும் தலைப்பில் தோழர் ஸ்டாலின் மீது பல்வேறு அவதூறுகள் சுமத்தப்பட்டுள்ளன. தோழர் ஸ்டாலின் அளவிற்கு உலக முதலாளித்துவத்தால் அவதூறு செய்யப்பட்ட தலைவர் வேறுயாரும் இல்லை. காரணம் ஜூனியர் விகடன் தினமுரசு என்பன கூறுவது போல் அவரது ஆட்சி தோற்றுவித்தது வேதனைகள் அல்ல. அவரது சாதனைகள்.**

எஸ் பாலச்சந்திரன்



# ரசிய புரட்சியின் வரலாற்று நாயகன் தோழர் ஸ்டாலின்

மிகவும் பின்தங்கிய விவசாய நாடாக இருந்த ரசியாவை 15 ஆண்டுகளில் தொழில் வல்லரசாக மாற்றிய தும் பத்து சதவீதம் கூட கல்வியறிவு பெற்றிராத நாட்டை ஏறத்தாழ நூறு சதவீதம் கல்வியறிவு கொண்ட நாடாக மாற்றியதும்; உலகப் பொருளாதாரமே நெருக்கடியில் சிக்கிய 1930களில் ரசியா மட்டும் முன்னேறியதும்; கிட்லரிடமிருந்து உலகையே காப்பாற்றியதும் ஸ்டாலின் தலைமையில் ரசிய மக்கள் சாதித்த வெற்றிகள். இவற்றுக்கு ஈடு சொல்லும் வெற்றிகள் இன்றுவரை உலகில் கிடையாது.



பிறப்பால் உயர்ந்தவர்களும் மன்னர்களும் முதலாளிகளும் மட்டும்தான் நாடாள முடியும் என்று நம்பிக் கொண்டிருந்த உலகத்தில் உழைக்கும் வர்க்கம் உலகாள முடியும் என்று நிருபித்துக் காட்டியது கம்யூனிசம். ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் உலகத் தலைவராக முடியும் என்று நிருபித்துக் காட்டியது லெனின் உருவாக்கிய ரசிய கம்யுனிஸ்ட் கட்சி.

லெனினுடைய மறைவுக்குப் பின் உலகின் முதல் சோசலிச நாட்டை உருவாக்கிக் காட்டிய தோழர் ஸ்டாலினின் பணி மகத்தானது. ஸ்டாலின் தலைமையி லான ரசியாவிற்கு நேரில் சென்று வந்த தாகூர் ரசியாவைப் பாராட்டி இருக்கின்றார். கலைவாணர் என்.எஸ்.கே இரும்புத்திரை நாடு என்று ரசியாவை சித்தரித்த முதலாளிகளின் பொய்ப்பிரச்சாரத்தை கேலி செய்து கட்டுரை எழுதி இருக்கின்றார். ரசியாவின் சிறைகள் உள்ளிட்ட எல்லா இடங்களுக்கும் சுதந்திர மாகச் சென்று பார்த்த தந்தை பெரியார் 'இதுதான் உண்மையான மனிதர்கள் வாழும் நாடு' என்று பாராட்டி இருக்கின்றார்.

ஆனால் தினமுரசு கட்டுரை தோழர் ஸ்டாலின் மீது சேற்றை வாரி வீசியுள்ளது. இது கம்யுனிச எதிர்ப்பையே தனது முதற் கொள்கையாகக் கொண்ட கிட்லர் தொடங்கிவைத்த ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் தொடர்ச்சியே. கிட்லரின் நண்பரான அமெரிக்கப் பத்திரிகை முதலாளி ரடால்ப் கெர்ஸ்ட் குடும்பத்திற்குச் சொந்தமான நியூயார்க் மார்னிங் போஸ்ட் 24 வார இதழ்கள், 12 வானொலி நிலையங் கள் ஆகிய அனைத்தின் மூலமும் 1930 முதலே தொடங்கி விட்டது இந்தப் பிரச்சாரம்.

கிட்லரின் வலதுகரமான கோயரிங்கின் கட்டுரைகளைப் பிரசுரிக்குமளவிற்கு வெளிப்படையான நாஜி ஆதரவாளன் கெர்ஸ்ட். கனடா நாட்டுப் பத்திரிகை யாளர் டக்ளஸ் டோட்டில் எழுதிய நூல் இவை அனைத் தையும் அம்பலமாக்கிறது. இன்னொரு ஸ்டாலின் எதிப்பாளரான ராபர்ட் கான்குவெஸ்ட் பிரிட்டிஸ் உளவு நிறுவனமான எம்-15 இன் கையாள் என்பதையும்

நிருபிக்கின்றார் டோட்டில். ஸ்டாலின் காலத்தில் லட்சக் கணக்கானோர் படுகொலை பட்டினிச்சாவு என்பதெல்லாம் கான்குவெஸ்ட் உருவாக்கிய புனைக்கதைகள்.

1943இல் கிட்லர் ஆக்கிரமிப்புக்கு எதிராக ரசியா போராடிக் கொண்டிருந்தபோது 'விலங்குப் பண்ணை' என்ற நாவல் மூலம் கம்யூனிசத்தை அவதூறு செய்த ஜார்ஜ் ஆர்வெல், கவிஞர் ஸ்டீபன் ஸ்பென்டர், 'பகலில் இருள்' என்ற ஸ்டாலின் எதிர்ப்பு நூல் எழுதிய கீஸ்லர், பிரபல அறிஞர் ரஸ்ஸல் ஆகிய அனைவரும் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக பிரிட்டிஸ் உளவு நிறுவனத் திடமிருந்து காசு வாங்கியிருக்கிறார்கள். இந்த உண்மை 1996 இல் பிரிட்டனில் வெளியாகி சந்தி சிரித்தது.

வெளிநாட்டவர்கள் இருக்கட்டும். ரசிய எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான சோல் ஜெனிட்சின்னே ஸ்டாலின் ஆட்சியைப் பற்றி சொல்லவில்லையா என்று வாதிடலாம். அவருக்கு நோபல் பரிசு கிடைக்கக் காரணமே ஸ்டாலினையும் கம்யூனிசத்தையும் அவதூறு செய்து எழுதியதுதான். வியட்நாமில் இருந்து அமெரிக்கா விரட்டப்பட்ட பின்னரும் "மறுபடியும் வியட்நாம் மீது அமெரிக்கா போர் தொடுக்க வேண்டும்" என்று அறை கூவல் விட்டவர் சோல்ஜெனிட்சின். அவருடைய யோக்கிய தைக்கு இதற்கு மேல் சான்று தேவையா?

ஸ்டாலின் மீதான குருசேவ் இன் தாக்குதல் வெறும் தனிநபர் விவகாரம் அல்ல. "லெனின் ஸ்டாலின் காட்டிய வழியில் இனி உலக கம்யூனிஸ்டுகள் புரட்சி செய்யத் தேவையில்லை. தேர்தலில் நின்றால் போதும். அமெரிக்கா வை எதிர்க்காமல் சமாதான சகவாழ்வு நடத்தலாம்" என்ற குருசேவின் துரோகக் கொள்கையையும் ஸ்டாலின் மீதான அவதூறையும் சீனத் தலைவர் மாசேதுங், இலங் கை கம்யூனிஸ்ட் தலைவர் சண்முகதாசன் உட்பட பல உலக கம்யூனிஸ்ட்கள் எதிர்த்தனர். இந்த உண்மையை வசதியாக மறைத்துவிட்டு உலக கம்யூனிஸ்ட் இயக்கமே ஸ்டாலினை தூற்றுவது போல் ஜீனியர் விகடன், தினமுரசு என்பன சித்தரிக்க முயலுகின்றன.



கம்னியூட்ஸ் தலைவர்கள் ஸ்ராலினும் மாவோவும். 1950ல் வரையப்பட்ட ஓவியம்.

குருசேவின் பாதையில் ரசியா இன்று முதலாளித்துவ நாடாகிவிட்டது. மீண்டும் பிச்சைக்காரர்கள், பட்டினி, வேலையின்மை, விபச்சாரம் அனைத்தும் அங்கே தலை விரித்தாடுவதை முதலாளித்துவப் பத்திரிகைகளே எழுது கின்றன. (முதலாளித்துவ) ஜனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதின் பயன் அம்மணமாகியுள்ளது.

Low Cost Accomodations in London

LANGORF HOTEL & APARTMENTS

20 Frognal, Hampstead, London, NW3 6AG

Flats
Studios
Rooms
Hostels

Accomodation available form 1 day to 1 year

Accomodation for families or singles

We have various accomodation to fit your budget.

No DSS

Tel : 079 1944 4994
Fax : 020 7281 6904

Email : tarrin@desilugroup.com
Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of companies
Mercers Rd, London N19 9PU.

பழைய ரசிய கம்யுனிஸ்ட் அரசின் ஆவணக்காப்பகங் களைத் திறந்தால் பல திகிலூட்டும் உண்மைகள் வெளி வரும் என அமெரிக்க முதலாளித்துவத்தின் கூலி எழுத்தா ளர்கள் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தார்கள். ஜெம்ஸ் கோல், டௌஜின் எழவன்ஜீக் என்ற ரசிய வரலாற்று ஆசிரியர்கள் ரசியக் கம்யுனிஸ்ட் கட்சியின் ஆவணக் காப்பக ஆதாரங்களை ஆராய்ந்து 1990 முதல் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதினார்கள். ஸ்டாலின் ஆட்சிக் காலம் பற்றி கூறப்பட்டவையெல்லாம் புளுகு மூட்டைகள் என்பதையே இவை நிருபித்தன. ஆனால் இவை முதலாளித்துவ நாட்டுப் பத்திரிகைகளால் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

இதைப் புரிந்து கொள்ள அதிகம் சிரமப்பட வேண்டிய தில்லை. இன்று ஈராக் நாட்டில் நடப்பதைப் பார்த்தால் போதும். பேரழிவு ஆயுதங்களை சதாம் வைத்திருப்பதாகச் சொல்லி பல லட்சம் ஈராக் மக்களைக் கொன்று குவித்து வருகின்றது அமெரிக்கா. ஆனால் இப்போது பேரழிவு ஆயுதங்கள் எதுவும் இல்லை என்பதை அமெரிக்க அரசே ஒப்புக்கொண்டுள்ளது. இருந்தாலும் ஈராக்கை ஆக்கிரமிக் காமல் இருந்தால் சதாம் அணு குண்டு தயாரித்திருப்பார் என்று விளக்கம் சொல்லுகிறார்கள் புஸ்சும் டோனி பிளேயரும். ஒரு சதாமை வீழ்த்தவே இவ்வளவு புளுகு! தன்னுடைய முதலாளித்துவ சாம்ராஜ்ஜியத்தையே ஆட்டம் காணச்செய்த ஸ்டாலினுக்கும் கம்யுனிசத்திற்கும் எதிராக எவ்வளவு புளுகியிருப்பார்கள் என்பதை சிறிது கற்பனை செய்து பாருங்கள்.?

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு அமெரிக்க அதிபர்களாகப் பதவி வகித்தவர்கள் அனைவரும் போர்க் குற்றவாளிகளாக கருதி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவ்வளவு கொடூரமான கொலைகளைப் புரிந்திருக்கின்ற னர் என்கிறார் அமெரிக்கப் பேராசிரியர் நவோம் சோம்ஸ்கி. இன்றைய உலகின் மோசமான மனித மிருகங்களான அமெரிக்க அதிபர் புஸ், பிரிட்டிஸ் பிரதமர் டோனி பிளேயர் ஆகியோர் ஈராக்கில் நடத்தி வரும் ஆபாச. வக்கிர, வெறித்தன நடவடிக்கைகள் கண்டு உலகமே அதிர்ச்சியுற்றிருக்கும் நிலையில் தோழர் ஸ்டாலின் பற்றி அவதூறு செய்து அதற்கு ஈடுகட்டவும் மூடி மறைக்கவும் ஜீனியர் விகடன். தினமுரசு என்பன எத்தனிக்கின்றன போலும்! ஆனால் உலகம் உள்ளவரை புரட்சி நாயகன் ஸ்டாலினின் புகழ் ஒருபோதும் மங்காது.



தோழர் ஸ்டாலின் குறித்து இலங்கை கம்யுனிஸ்ட் தலைவர் காலம் சென்ற தோழர் சண்முகதாசன் அவர்களின் கருத்துக்கள்:-

ஸ்டாலின் ஒரு மாபெரும் மார்க்சிய லெனியவாதி. புரட்சிவாதி. அவர் ஒக்டோபர் புரட்சியின் தலைவர்களில் ஒருவர். அவர் லெனினுடைய பணியைத் தொடர்ந்து செய்து ஏகாதிபத்தியம் முதலாளித்துவம் என்ற கடலால் சூழப்பட்ட தனியொரு நாட்டில் சோசலிசத்தை வெற்றிகர மாகக் கட்டியமைத்தார். முன்னர் ஒருபோதும் செய்யப்ப டாத பணியை அவர் நிறைவேற்றினார். அவர் பின்பற்ற முன்னுதாரணம் இருக்கவில்லை. கடைப்பிடிக்க முன் அனுபவம் இருக்கவில்லை. வரலாற்றில் முதல் தடவை யாகத்தான் அந்தப் பணி செய்யப்பட்டது. சோவியத் யூனியனில் சோசலிசத்தைக் கட்டி அமைத்து பின்னர் அதை கிட்லரின் பாசிசத்திற்கு எதிராகப் பாதுகாத்தது தான் ஸ்டாலின் புரிந்த அற்புதம் ஆகும்.

ஸ்டாலின் தனது வேலையை நன்கு செய்திருக்கா விடின் உலகத்தின் வரலாறு வித்தியாசமானதாக இருந்திருக்கும். பாசிசம் வெற்றி பெற்றிருக்கலாம். ஸ்டாலின் கட்சிக்குள் நுழைந்து கொண்ட ட்ரொஸ்கி சியானேவ், கமெனவே றாடெக், புக்காரின் போன்ற பூர்சுவா வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி பிரதிநிதிகள் பலரை வெளியேற்றினார். அவர் அப்படிச் செய்திருக்காவிட்டால் கிட்லருக்கு உள்ளேயிருந்து கதவு திறக்கப்பட்டிருக்கும். இந்த ஆக்கபூர்வமான சாதனைக ளைப் பார்க்காமல் ஸ்டாலின் பாத்திரத்தை சரியாகக் கணிக்கமுடியாது.



தேழர் ஸ்டாலின் குறித்து சீனப் புரட்சியின் தலைவர் தோழர் மாஓ சேதுங் அவர்களின் கருத்துக்கள்.

எல்லோருக்கும் தெரிந்தவாறு ஸ்டாலின் தமது கடைசிக் காலத்தில் சில தவறுகளை இழைத்தபோதும் அவருடைய வாழ்க்கை ஒரு மாபெரும் மார்க்சிய லெனிய புரட்சிவாதியின் வாழ்க்கையாகும். இளமையில் ஸ்டாலின் ஜார் மன்னராட்சிக்கு எதிராகவும் மார்க்சிய லெனியத்தை பிரச்சாரம் செய்வதற்காகவும் பாடுபட்டார். 1917 புரட்சிக்கு வழிகோலிய போராட்டத்தில் அவர் கலந்துகொண்டார். அக்டோபர் புரட்சிக்குப்பின் அதன் கனிகளைப் பாதுகாக்க அவர் பாடுபட்டார். லெனின் மறைவுக்குப் பின்னர் ஏறக் குறைய 30 ஆண்டுகள் சோசலிசத்தைக் கட்டியமைக்கவும் சோசலிசத் தாய்நாட்டை பாதுகாக்கவும் உலக கம்யுனிச இயக்கத்தை முன்னேற்றவும் அவர் பாடுபட்டார்.

முழுதாகப் பார்த்தால் ஸ்டாலின் எப்பொழுதும் வரலாற்று வளர்ச்சியின் முன்னனியில் நின்று போராட்டத் திற்கு வழிகாட்டினார். அவர் ஏகாதிபத்தியத்தின் அசைக்க முடியாத எதிரி. ஸ்டாலின் சில தவறுகள் விட்டபோதும் அவர் ஒரு உறுதியான கம்யுனிஸ்டாக இருந்தார். ஸ்டாலினுடைய தவறுகள் அவருடைய சாதனைகளுடன் பார்க்கும்போது இரண்டாம் இடத்திலேயே இருக்கின்றன.❑

**ஸ்ராலின் பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் மனித உரிமைவாதிகளிடமும் மேற்குலக இடதுசாரிகளிடமும் உண்டு. உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றது.**





திரைவிமர்சனம்

# ‘கனவுகள் நிஜமானால்’

ரி கொன்ஸ்ரன்ரைன்

புதியவனின் `கனவுகள் நிஜமானால்` இலண்டனிலும் வெளியேயும் பரவலாக திரையிடப்பட்டது. மொத்தமாக 3,000 பேர்வரை இத்திரைப்படத்தை பார்த்துள்ளனர். ஏனைய புலம்பெயர்ந்த நாடுகளிலும் இப்படம் திரையி டப்படவுள்ளது. குறிப்பாக வே.ரமேசும் ஏனையவர்களும் ரிக்கற்றுக்களை விற்று மக்களைப் புலம் பெயர்ந்தவர்க ளின் படத்தைப் பார்க்க வைத்தது பாராட்டுக்குரியது. மக்களும் கனவுகள் நிஜமாகும் என்ற நம்பிக்கையை வளர்ந்து வரும் இயக்குநர் புதியவனுக்கு வழங்கி உள்ளனர். ‘எங்கட பெடியன்’ கஸ்டப்பட்டு ஒரு படம் எடுத்திருக்கிறான் என்ற அனுதாபத்தினாலோ, அல்லது தெரிந்தவர்கள் யாராவது படத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதினாலோ, அல்லது ......, அல்லது இது உண்மையி லேயே ஒரு தரமான படைப்பெனக் கருதியதாலோ மக்கள் அந்த நம்பிக்கையை வழங்கி இருக்கலாம்.

சினிமா என்பது ஒரு மொழி. கமரா பேசும் மொழி. அதனை எந்த மொழி தெரியாதவர்களும் விளங்கிக் கொள்ள முடியும். மேலும் சினிமாவுக்கான சில பண்புகள் உண்டு. அந்த வகையில் ‘கனவுகள் நிஜமானால்’ ஒரு சினிமாவுக்கான அழகியலைக் கொண்டுள்ளதா?

புலம்பெயர்ந்த சராசரிக் கணவன், மனைவி அவர்க ளுக்கு இரு பெண் குழந்தைகள். இளைய மகள் நல்ல பெறுபேறுகளை எடுக்கவில்லை எனத் தாய் கண்டிக்கிறார். கொடுமைப்படுத்துகிறார் என்று காட்சி ஆரம்பமாகிறது. மூத்தமகள் தான் விரும்பிய இசைத்துறையில் படிக்க பெற்றோர் குறிப்பாகத் தாய் தொடர்ந்தும் மறுக்கிறார். கோடம்பாக்கம் - பொலிவூட் கிளைமக்ஸ் போல் மகளுக்குத் தெரியாமல் தந்தை இசைத்துறையில் பட்டப் படிப்பைத் தொடர அனுமதியைப் பெற்று வருகிறார். ஆனால் மனமுடைந்த மகள் விரக்தியின் உச்சத்திற்கு சென்று தற்கொலைக்கு முயற்சிக்கிறார். மகள் தற்கொலை செய்து கொண்டாரா? இல்லையா? இதுவே கதை.

கதை மாந்தர்களைப் பேசவிட்டு (பேசாவிட்டால் ஊமை படம்) அதனை ஆங்காங்கே காட்சிப்படுத்தி காட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக ஓரிரு மணித்தியாலங்களுக்கு ஒட்டும் வகையில் ஒட்டி திரையிடுவது சினிமா என்றால் புதியவன் எடுத்ததும் சினிமா தான். ‘கனவுகள் நிஜமானால்’ சினிமாவை புதியவனின் பாணியில் விமர்சித்திருந்தால் இப்படித்தான் விமர்சிக்க முடியும்.

இயக்கம், கமரா, ஒளி, இசை, காட்சித்தொகுப்பு, ....... என்ற சினிமாவுக்கான ஒவ்வோர் அம்சங்களிலும் `கனவுகள் நிஜமானால்` நீண்டதூரம் செல்ல வேண்டி உள்ளது. முதலாவது படைப்பான `மாற்று` இலும் பார்க்க இரண்டாவது படைப்பில் முன்னேற்றம் உண்டு. ஆனால் போதாது. இரவு, விடியற்காலை காட்சிகள் இருட்டாகவே காட்டப்பட்டு உள்ளது. அந்தப் பொழுதுகள் இயல்பாக அமையவில்லை. ஒளிப் பயன்பாடுகள் மூலம் அதனைத் தவிர்த்திருக்க முடியும். ஏதோ ஒரு இசை வந்தால் போதும் என்ற அளவில் பின்னணி இசை வழங்கப்பட்டு உள்ளது. `மாற்று` இல் இருந்து `கனவுகள் நிஜமானால்` வரையான பாதை மிக இலகுவானது. இதிலிருந்து ஒரு சினிமாவுக் கான பாதை மிக மிகக் கடினமானதாகவே இருக்கும்.

படத்தின் கதைக்கருவுக்காக புதியவனுக்கு சாபாஸ் கொடுக்க வேண்டும். அது சரியான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. குடிபெயர்ந்த குடும்பங்களில் உள்ள அளவுக் கதிகமான அபிலாசைகளை அனுசரிக்கவும் முடியாமல் வெறுக்கவும் முடியாமல் உள்ள சமுதாய நடைமுறைகள். இவற்றுக்கிடையே சிக்குண்டு குழம்பும் பிள்ளைகள் எனப் புலம்பியல் பிரச்சினைகளை மனக்கண் முன் கொண்டு வருகிறார் புதியவன். (ஆனால் அக்கதையை அதனை கமராவினூடாக சினிமா மொழியில் சொல்லும் போது அவர் எதிர்பார்த்த தாக்கத்தை கொண்டுவரவில்லை.)

தாயை மிகவும் கொடுமைக்காரியாகவும் ரிவி தொடர்க ளில் தோன்றும் வில்லி போலவும் சித்தரித்திருப்பதும் எல்லாக் குழப்பங்களுக்கும் மறுமொழியாக தற்கொலை முயற்சியை முன் வைத்திருப்பதும் யதார்த்தமற்றது.

மேலும் நடிப்பு, திரைக்கதை வசனம், போன்ற விடயங் களிலும் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படவில்லை. முக்கிய கதாபாத்திரங்களில் தாயும், தகப்பனுமாக நடித்த அகிலா வினதும் வாசுதேவனினதும் நடிப்பு பாராட்டத்தக்கது. ஏனை யவர்களில் முகபாவங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் செயற்கையாகவும் அதீதமாகவும் காணப்பட்டது. கதாபாத் திரங்கள் ஒழுங்கு வரிசையில் வந்து தமக்கு எழுதிக் கொடுத்த வசனங்களைக் கூறிவிட்டுச் செல்வதைப் போலவே; இலங்கை வானொலியின் இசையும் கதையும் போலகாட்சிகள் அமைந்திருந்தது.

மாமனாரின் பாத்திரத் தெரிவு படத்திற்கு பொருத்தமாக அமையவில்லை. மாமன் - மருமகள் உறவு பிரதிபலிக்கப்

**நிமிர்ந்து நடப்பவர் எல்லாம் துணிந்தவர் என்றால் ? என்ற தலைப்பில் ஆர் புதியவன் சென்ற தேசம் இதழில் இளைய அப்துல்லாவின் பிணம் செய்யும் தேசம் நூல் பற்றியும் அதன் வெளியீட்டு விழா பற்றியும் விமர்சித்திருந்தார். அதற்கு பதில் தருகிறார் இளைய அப்துல்லா.**

# பைத்தியங்களைக் கட்டுதல் இயலா



**இளைய அப்துல்லா**
கவிஞர், எழுத்தாளர்,
தொ.கா முன்னிலையாளர்

கனவுகளைத் தொலைத்துவிட்டு நம்பகமில்லா பரந்த வெளியில் உலவுகின்ற பறவை உயிர்வாழ்வதை விடுத்து அந்தரத்து புழுக்களின் சகவாசத்தோடு கூடு கட்டுவது பற்றி யோசித்தது, போல

எங்குமே இளவேனிற்காலமோ அல்லது கூடார்ந்த மரமோ தேடியது. தேடியது கிடைக்காமல் தொலைதூரம் பறக்க எத்தனித்து மனதில் பைத்தியம் உண்டாகி பின்னர் ஒரு சமவெளிதேடி கண்கள் இருண்ட போதும் கனவுகளை உடன் இறகுகளில் காவிக்கொண்டு புதிய உலகத்துக்குள் ஒரு கதவு வழியாக புலப்பட புறப்பட நாற்திசைகளிலும் ஒவ்வொரு ஜன்னல்கள் திறந்திருக்கக் கண்டு ஒலியில்லா ஓவியத்தை கொண்டு வந்து ஒரு ஆனந்த வெளியென்று மீண்டும் தான் கனவு கண்டதாகச் சொன்னது பறவை. அதனிறகுகள் ஒடிந்திருந்தன.

வெற்றிடம் அதுவே தான் தரிப்பிடம். எந்த தளைகளை கட்டுடைத்து ஒரு வெளியிடை புகுந்தாலும் வாராது என்றறிவு கூட இல்லாத ஒரு பறவை கூழ் முட்டையிட்டது.

ஒரு நவீன சூழலில் எது பிறப்பு எது இறப்பு என்னும் மயக்கத்தில் இருக்கும் அண்டவெளி சீவன்களிடை முற்றுந் தரிப்பிற்கும் காற்புள்ளிக்கும் தவம் கிடக்கா வரம் தேடி அண்டத்தை விட்டு மீளவும் நுழைவது சுபம்.

`பணிவு உடையவன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி அல்ல மற்றுப்பிற`

ஒரு புல் வெளிக்குள் காலம் சுருண்டு கிடக்கிறது. அவனிடம் தன்னை பெருமேதாவி என்றெண்ணும் சிறுமையில் தோய்ந்து நாக்குழற்றி நக்கி ஒரு நெருப்பிடை பரவும் நோயெனவிலக்கி கணீரென்ற சாமப்பொழுதில் ஒரு கோட்டானாகி இன்னும் பிறவாகி அவதாரம் மேவித் தன் நிலை சுருக்கி உறைந்து கண்மறைந்து யாரோடு நோகின் எதுவும் யாராகிலும் எழுத்துதவி வேண்டின் கொடூரமே உருவாகிய ஒரு சொல்லும் பயனுற வேண்டா கடிதான சுற்றில் காரணங்களை ஒரு முறையும் பகுத்தறிவு கொள்ளா விண்ணான பைத்தியங்களைக் கட்டுதல் இயலா.

அது கத்தும் கதறும் வேண்டாமென்றும் வேண்டுமென்றும் கனவிடை மிதக்கும் தமிழைப்பிழை சொல்லும் காரணமின்றி சொல்லும் சொல்லிடை கவனம் வேண்டா.

சிலை ஒருக்காலும் சித்திரம் கீறறியா முதல் கொண்டு முனைப்பு நெகிழ்ந்து போய் நொடிப் பொழுதும் முறுக்குதல் இழிவு. அப்பால் சிதறிய கூழாங்கல் நாணிடை அறுந்து தெறித்த சுவர் ஒரு விழுது போல் ஓடி ஓடி பின்னகூர்ந்து செவிலி தேடி அரக்கி வழுக்கி மண்ணிடை தடவி ஒரு உளிமேல் அடிப்பது சுத்தியல் எப்பொழுதுமே ஒரே கருவிதானா?

முள் தரிக்கும். அது நிற மூட்டி பலவர்ணங்களில் ஒரு குழையல் சாமியாடிவிட்டு வேப்பிலை தேடி இன்னும் நிழலிடை ஒதுங்கும் காகம். அவருக்கும் தெரியாத கறுப்பு.

ஒரு மரம் குத்தாகி நிற்பதுவும் ஒரு மலை குத்தாகி நிற்பதுவும் ஒரு மனிதன் குத்தாகி நிற்பதுவும் ஒரு கழி நிலையூன்றி நிற்பதுவும் வெளவாலுக்காக வல்ல........❑.

---

படவில்லை. அதாவது பாத்திரங்கள் வரையறுக்கப்பட்டு அதற்கேற்ற நடிகர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமே ஒழிய மறுதலையாகச் செய்ய முடியாது

நகைச்சுவைப் பாத்திரங்கள் கவுண்டமணி - செந்தில் ஆகியோரின் நகைச்சுவைக்கு ஒப்பானதாக அமைந்தது. ஆனாலும் அவ்வுணர்வு மக்களாலும் வரவேற்கப்பட்டது. நகைச்சுவையுணர்வுகளை மேலும் மெருகூட்டியிருக்க முடியும். ஒருவரது இயலாமையையும், குறைபாட்டையும், வன்முறையையும் நகைச்சுவையாக்குவது அவற்றுக்கு ஒரு சமூக அங்கிகாரத்தை வழங்குவதாக அமையும்.

தகப்பனின் தந்தையின் காட்சிகள், சாமத்தியவீட்டு அழைப்பிதலும் அதற்கு லீவு கேட்கும் காட்சிகளும், பரிசளிப்பு விழாவும் அதையொட்டி ஏற்பட்ட காட்சிகளும், புதியவன் தோன்றும் காட்சி என்பன கதைக்கருவுடன் இணைக்கப்படாமல் அநாவசியமாக நிற்கின்றன.

எது எப்படி இருந்தாலும் புலம்பெயர் சினிமாவில் கனவுகள் நிஜமானால் ஒரு மைல்கள். புதியவனின் முயற்சிக்கும் அவரது குழுவுக்கும் அதில் முதலீடு செய்ய முன்வந்த கொமேர்சியல் டைரக்ட் நிறுவனத்துக்கும் பாராட்டுக்கள்.❑

# சாதனைகள் செய்வோம்

விதி,
விதிப்படி தான் எம் வாழ்க்கை நடக்கின்றது
கடவுள் எம் வாழ்வின் ஒவ்வொரு படிகளையும்
நியமித்து விட்டான்,
எம் வாழ்க்கை
அந்த நியமத்தின்படிதான் நடக்கின்றது
என்ற நம்பிக்கை
எம்மில் பலரிடம் இருக்கின்றது.

விதிப்படி எம் வாழ்க்கை அமைகிறதென்றால்
நாம் ஒரே இடத்தில் படிக்காமல் அமர்ந்திருக்கலாமே?
வேலை எம்மைத் தேடிவரும்.
கல்யாணம் கூடத் தன்பாட்டில் நடக்கும்
ஏன் படிக்க வேண்டும்?
எமக்கு அறிவு தானாகவே வளரும்
விதிப்படி தான் எம்வாழ்வு நகர்கிறதென்றால்.

விதியை நம்பி வாழாது
அது எம் கையில் தான் உள்ளது என்று
நம் வாழ்க்கையை நாம் தான் வாழ்ந்து முடிக்க வேண்டும்
சோதனைகளை எதிர்த்து சாதனைகளைச் செய்ய வேண்டும்.

சங்கரா.



எஸ் அகஸ்தியர்
29.08.1926 - 08.12.1995
இலங்கையின் முன்னோடி
சிறுகதை எழுத்தாளரான
அகஸ்தியருடைய இந்த
ஓவியத்தை அவருடைய
7 வயதான பேரன் அகஸ்தி
சிறுவர் தேசத்துக்காக
வரைந்துள்ளார்.



## பரிசுகளை வெல்லுங்கள்

சிறுவர் தேசத்தில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆக்கங்கள் சிறுவர் தேசத்தில் வெளி வந்தால் உங்களுக்கு பரிசுகள் வீடு தேடி வரும். உங்கள் ஆக்கங்களுடன் உங்கள் பெயர், முகவரி என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பவும்.

## கவிதை எழுதிய

**சங்கரா**

## இவ்விதழுக்கான பரிசைப் பெறுகிறார்

இவருக்கு எமது வாழ்த்துக்கள்.












# தற்காப்புக்கு அப்பாலும் கராத்தே

UK Isshinryu Karate Association அமைப்பின் வருடாந்த விழா மார்ச் 12ல் ஈஸ்ங்ஹாமில் நடைபெற்றது. 400 பேர் வரை கலந்துகொண்ட இவ்விழாவில் அமைச்சர் ஸ்ரீவன் ரிம்ஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து சான்றிதழ், நிற பட்டிகளை வழங்கினார். ஒலிம்பிக் விழாவை நடாத்த இலண்டன் தயாராகிக் கொண்டிருக்கும் போது நியூஹாமில் நடைபெறும் இந்நிகழ்வு தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த மருத்துவர் சிவபாதம் தமிழர்கள் மத்தியில் கராத்தேயின் அவசியம் உணரப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். காராத்தே தற்பாதுகாப்புடன் இன்று பெரும் சுகாதாரப் பிரச்சினையாகி வரும் உடற்பருமனைக் கட்டுப்படுத்தவும் நன்னடத்தையை மாணவர்களுக்கு ஊட்டி அவர்களை நல்ல பிரஜைகளாக்கவும் உதவுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

விழாவில் மாணவர்கள் தாம் கற்றுக் கொண்டு தேர்ச்சி பெற்ற தற்காப்புக்கலை நுட்பங்களை செய்து காண்பித்தனர். சிறுவர்கள் உடைக்கும் நுட்பங்களைச் செய்து காட்டியது பலரையும் ஆச்சரியப் பட வைத்தது. பெண்களை பூவின் மென்மைக்கு ஒப்பிடுபவர்கள் அங்கு அப்பெண்களும் சிறுவர்களும் ஓடுகளை அடுக்கி வைத்து நொருக்கியதும் ஆச்சரியப்பட்டனர். இவை மாணவர்களின் ஒருமுகப்படுத்தலையும் மனத்தைரியத்தையும் வெளிப்படுத்தியது.

இவ்வைபவத்தில் 50 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் நிறப்பட்டிகளும் வழங்கப்பட்டது. சோதிலிங்கம் ஜனார்த்தனன் (23), சோதிலிங்கம் ஜெயதரன்(27), குணபாலன் ராஜசோழன்(28) ஆகியோர் 6 ஆண்டுகள் கடின பயிற்சிக்குப்பின் உயர்ந்த நிறப் பட்டியான கறுப்புப் பட்டியைப் பெற்று பயிற்சியாளர்களாகினர் (சென்சாய்). ஏழு வயது மாணவன் நிவேதன் பாலகுலேந்திரன் இவ்வாண்டின் சிறந்த மாணவனுக்கான விருதை

வென்றெடுத்தார்.

அஜந்தன் உதயகுமார், சஞ்செய் ஈஸ்வரதாஸ், ஆர்த்திகா பாஸ்கரன் ஆகிய மூவரும் 11 பிளஸ் பரீட்சைகளில் சித்திபெற்றமைக்கான சிறப்பு விருதுக ளைப் பெற்றனர். கராத்தேயுடன் மட்டு மல்லாமல் மாணவர்களின் கல்வியையும் ஊக்கப்படுத்தம் நோக்குடன் இவ்விருது வழங்கப்பட்டது.


ஏழு ஆண்டுகளுக்கு முன் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலருடன் 'ஓ' சென்சாய் க இரவீந்திரன் இக்கல்லூரியை ஆரம்பித் தார். இத்தற்காப்புக்கலைக் கல்லூரி இன்று நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்க ளைக் கொண்டு ஒரு சிறந்த தற்காப்புக் கலைக் கல்லூரியாக உள்ளது. ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் முதல் 50 வயதான பெரியவர்கள் வரை இக் கலையை பயில்கின்றனர். புஸ்பநாதனும் அவரது மனைவியும் மகன் கௌரீசனும் (10), மகள் கௌரியும்(8) இங்கு குடும்பமாகப் பயில்கின்றனர். நிறப்பட்டி யைப் பெற்றுக் கொண்ட ஈஸ்ற்ஹாமில் வாழும் புஸ்பநாதன் தனது கடைக்குட்டி க்கு ஐந்து வயதானதும் அவவுக்கும் கராத்தே கற்றுக் கொடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.


வெவ்வேறு வயதுப் பிரிவினருக்கு வெவ் வேறு வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. குடும்பப் பெண்கள், வேலைக் குப் போகும் பெண்களுக்கு தனி வகுப்பு கள் நடத்தப்படுகின்றது. தான் தற்காப்புக் காகவே கராத்தே கற்க ஆரம்பித்ததாகக் குறிப்பிட்ட சாந்தினி ஜெயதங்கராஜா தற்போது கறுப்புப் பட்டி எடுக்க வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டு உள்ளாதாகக் குறிப்பிட்டார்.

இவ்விழாவை மலர்விழி, அஞ்சனா ராமதாஸ் ஆகிய இருவரும் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் தொகுத்த வழங்கினர். தற்காப்புக் கலையை பயின்ற மலர்விழி கராத்தே நுட்பங்களை விளக்கி நிகழ்ச்சியை மெருகூட்டினார்.

வகுப்புகள் தற்போது ஈஸ்ற்ஹாம், லூசியம், ரூற்றிங் ஆகிய பகுதிகளில் நடைபெறுகிறது. இலண்டனின் ஏனைய பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும் என கல்லூரிச் செயலர் நந்தகுமார் நம்பிக்கை தெரிவித்தார்.❏






# Words To Live By

## DREAMS

"A dream is in the mind of the believer,
and in the hands of the doer"
"You are not given a dream,
without being given the power to make it come true."

## FRIENDSHIP

"A friend is someone who walks in when the rest of the world walks out."
"True friends are like diamonds, precious but rare."
"Don't walk in front of me, I may not follow.
Don't walk behind me, I may not lead.
Just walk beside me and be my friend."

## LOVE

"Love is never having to say you are sorry."
"When you love a person, you are giving him, the power to hurt you."
"Love is having to see more than what meets the eyes."
"You never lose by loving. You always lose by holding back."
"True love is like ghosts,
which everybody talks about and few have seen."

## THE FUTURE

"Heal the past; live the present; dream the future."
"Do not start today, with the broken pieces of Yesterday."
"Destiny is not a matter of chance.
It is a matter of choice: it is not a thing to be waited for,
it is a thing to be achieved."

## LIFE

"Life will only come once, so make the most out of it."
"God didn't gave us all things to enjoy life,
but life to enjoy all things."
"A journey of a thousand miles begins with a single step."
"Mistakes are not intended to down us
rather they make us stronger."

புத்தம் புதிய கணணிகள் £199 முதல்
உங்கள் தேவைகளுக்கு ஏற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

**Viveq Computers**

Tel : 020 8422 3422

155 Greenford Rd
Sudbury Hill
HA1 3QN

# POLICE APPEAL FOR ASSISTANCE

**Young Tamil men from your community are being intimidated, seriously assaulted, and in extreme cases, murdered. The Metropolitan Police Service wants your assistance to help stop the violence.**

Today's operation is part of tackling this crime. We are committed to making communities safer.

Without your help it is very difficult for us to know who the criminals targeting your community are.

If you have any information on people who may be involved in criminal gangs, violence, financial fraud or other crime please phone the confidential Tamil hotline on:

# 0800 587 2935

where you can leave a message in Tamil or English. Alternatively please speak to your local police.

உங்களது சமூகத்தை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மிரட்டப்பட்டும், கடுமையாக தாக்கப்பட்டும், சில வேளைகளில் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இந்த வன்முறையை தடுத்து நிறுத்த மாநகர காவல் துறை உங்களது உதவியை நாடுகிறது.

இந்த குற்றச்செயல்களை தடுத்து நிறுத்துவது இன்றைய எமது நடவடிக்கையின் ஒரு அங்கமாகும். சமூகங்கள் பாதுகாப்புமிக்கதாக மாறவேண்டும் என்பதில் நாங்கள் சிரத்தையாக இருக்கிறோம்.

உங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் உங்களது சமூகத்தை இலக்குவைக்கின்ற குற்றவாளிகள் யார் நாங்கள் கண்டறிவது மிக கடினம்.

குற்றக்கும்பல்களுடன் தொடர்புகொண்டவர்கள், வன்முறையில் ஈடுபடுபவர்கள், பணம் சம்பந்தப்பட்ட ஏமாற்று வேலைகள் மோசடிகளை செய்பவர்கள், வேறு குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஆகியவர் எவர் பற்றியேனும் உங்களிடம் தகவல் இருந்தால், தயவுசெய்து நீங்கள் தமிழில் தகவல் வழங்கக்கூடிய சிறப்பு சேவைக்கு 0800 587 2935 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். தமிழிலோ ஆங்கிலத்திலோ பேசி நீங்கள் செய்தியை பதியவிடலாம். மாறாக உங்கள் பகுதி பொலீசாரையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

**METROPOLITAN POLICE** *Working for a safer London*

30.08.04/G18541 A54

1. கனடிய தமிழர் தகவல் சஞ்சிகையின் 14வது ஆண்டு நிறைவும் விருது வழங்கலும் ஸ்காபறோவில் பெப் 13ல் நடந்தது. இலங்கைத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணிக்காக நூலக வியலாளர் என் செல்வராஜாவுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. கனடாவின் NDPயின் தலைவர் Jack Layton, ரொரன்ரோ மத்தி ரோஸ்டேல் பிரதிநிதி ஜோர்ஜ் ஸ்மித்தர்மான், டொன்வலி கிழக்கின் ஜஸ்மின் ரட்டன்சி ஆகியோர் தத்தமது அரச அமைப்புகளின் சார்பில் சான்றிதழ்களை வழங்கினர்.



2. சுஜாதா அமரசிங்கத்தின் வயலின் அரங்கேற்றம் வின்சன் சேர்ச் மண்டபத்தில் மார்ச் 5ல் நடைபெற்றது. சங்கீத வித்துவான் ஸ்ரீமதி ஞானாம்பிகை பத்ம சிகாமணியின் மாணவியான சுஜாதா, குமாரி அம்பிகை சீவரட்ணத்திடம் பரத நாட்டியத்தை முறையாகப் பயின்று கடந்த ஆண்டு செப்ரம்பரில் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது. 24 வயதான சுஜாதா லுட்டன் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்தாதிக்கான இறுதியாண்டில் கற்று வருகிறார். மேலும் தான் பயின்ற நடனத்தை கற்பித்தும் வருகிறார்.



3. ஈரோஸ் அமைப்பின் மறைந்த தலைவர் சங்கர் ராஜியின் (படம்) நினைவுப் பேருரை மார்ச் 19ல் London School of Economics ல் நடைபெற்றது. ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதி குகன் பேசும் போது வி.புலிகளே தமிழ் மக்களின் ஒரே தலைமை என்றும் வி.புலிகளை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். ஈரோஸ் ரவி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினார். பேராசிரியர் பிரபு மேகானந் தேசாய் நினைவுப் பேருரையாற்றினார்.



4. சுனாமிக்குப்பின் சமாதானமும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் House of Commonsல் இடம்பெற்றது.அன்ரு லவ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலை Friends of Sri Lanka, Dr. நிக்கலஸ்பிள்ளை பெப்ரவரி 23ல் ஒழுங்கு செய்தார். சிங்கள, தமிழ் மக்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டு தம் கருத்துக்களை வெளியிட்டனர். சில முரண்பாடுகள் காணப்பட்ட போதும் இலங்கை மக்கள் ஐக்கியப்பட்டு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது தொனித்தது.

